*Free Circulation*

வெற்றிமணி வெளியீடு 28

# சிவத் தமிழ்

2016

மகத்தான உறவு



தமிழரின் தொன்மையைக் குறிக்கும் வேல் வணக்கம்

மாணிக்கவாசகரும் மகளிர் பாடல்களும்

திருமந்திரத்தில் உள்ள உடற் கூற்று அறிவியல்


பிரதம ஆசிரியர்

கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A


அகமும் புறமும் ஆலயம் அமைப்போம்

# நீங்களும் கடவுள்தான்

## அன்பே சிவம்



ஒரு சின்ன பையன் கடவுளை பார்க்க வீட்டில் இருந்து கிளம்பினான். அதிக தூரம் பயணம் செய்ய வேண்டி இருக்குமே என்று தின்பண்டங்களையும் மதிய உணவையும் பையில் எடுத்து கொண்டான்.
காலையில் இருந்து நடக்க ஆரம்பித்தவன் சிறிது நேரம் ஓய்வு எடுக்கலாம் என்று அருகில் உள்ள பூங்காவுக்குள் நுழைந்தான்.அங்கு வயதான பாட்டி ஒருவர் புறாக்கள் சாப்பிடுவதை பார்த்துக் கொண்டே இருந்தார்.

நடந்து வந்த களைப்பில் தாகம் எடுக்கவே தண்ணீர் பாட்டிலை திறந்து தண்ணீர் குடிக்க ஆரம்பித்தான்.அந்த பாட்டி அவனையே பார்த்து கொண்டிருந்தாள்.
ஒரு வேளை பாட்டிக்கு தாகமாக இருக்குமோ என்றெண்ணி தண்ணீர் பாட்டிலை நீட்டினான். பாட்டியும் அவனை பார்த்து அழகாக புன்னகைத்துவிட்டு தண்ணீரை வாங்கி குடித்தாள்.

அந்த சிறுவன் இதுவரை அவ்வளவு அழகான புன்னகையை பார்த்ததில்லை அதனால் திரும்பவும் அவர்கள் புன்னகையை பார்க்க தான் கொண்டுவந்து உணவு பொட்டலத்தை பிரித்து கொடுத்தான்.

அந்த பாட்டியும் மீண்டும் அவனை பார்த்து புன்னகைத்துவிட்டு அவன் கொடுத்த உணவை சாப்பிட ஆரம்பித்தாள். இரண்டு பேரும் ஒரு வார்த்தை கூட பேசவில்லை ஆனால் அடிக்கடி ஒருவரை பார்த்து ஒருவர் புன்னகைத்து கொண்டே இருந்தனர்.

நேரம் ஆக ஆக அம்மா ஞாபகம் வந்தது சிறுவனுக்கு அதனால் எழுந்து வீட்டிற்கு செல்ல ஆரம்பித்தான். சிறிது தூரம் நடந்தவன் சட்டென திரும்பி குடுகுடுவென்று ஓடி சென்று பாட்டியை கட்டி அணைத்தான்.பாட்டி அவன் செயலை பார்த்ததும் மிகவும் பிரகாசமாக சிரித்தாள்.

சிறுவன் வீட்டிற்குள் நுழைந்ததும் அவன் மிகுந்த சந்தோஷத்தில் இருப்பதை பார்த்த அவன் அம்மா என்ன நடந்தது என்று கேட்டாள்.'நான் மதியம் கடவுளுடன் சாப் பிடேன்' என்றான் கடவுளின் புன்னகை மாதிரி நான் இதுவரை எங்கும் பார்த்ததில்லை என்றான்.

அதே நேரம் அந்த பாட்டி அவர்கள் வீட்டில் நுழையும்போது என்ன அம்மா இவ்வளவு சந்தோஷமாக இருக்கிறீர்கள் என்று அவள் மகன் கேட்டான்.'இன்று மதியம் நான் கட வுளுடன் சாப்பிட்டேன்' என்றாள் அது மட்டும் இல்லை நான் நினைத்ததை விட கடவுள் மிக சிறிய வயது கொண்டவராக இருந்தார் என்றாள்.

அறிமுகம் இல்லாதவர்களிடம் ஒரு சின்ன புன்னகை, ஆறுதலான வார்த்தை, சின்ன உதவி செய்து பாருங்கள் நீங்களும் கடவுள் தான். கடவுள் வேறெங்கும் இல்லை நம்மிடம் தான் இருக்கிறார்.

**படமாடும் கோயில் பரமர்க்கொன்று ஈயில்**
**நடமாடும் கோயில் நம்பர்க் கங்காகா**
**நடமாடும் கோயில் நம்பர்க் கொன்று ஈயில்படமாடும்**
**கோயில் பரமர்க் கங்காகும்**

இந்தத் திருமந்திரப் பாடலின் அர்த்தம்:
ஆண்டவனுக்கு மட்டுமே செய்வது, நடமாடும் கோயிலாய் இருக்கும் அடியவர்க்குச் செய்தது ஆகாது. அடியவர்க்கு ஒன்று கொடுத்தால் அது ஆண்டவனுக்கே கொடுத்தது ஆகும்!

நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த திருமூலர் என்னும் சித்தர், கோயிலில் இருக்கும் இறைவனை ”படமாடும் கோயில்“ (சிற்பம்) என்றும், ஏழை எளியவர்களை ”நடமாடும் கோயில்“ என்றும் குறிப்பிடுகிறார்.

படமாடும் கோயில்..இறைவன்
நடமாடும் கோயில்..மனிதன்
உன் அருகில் துன்பத்தில் வாழ்பவனுக்கு உதவிக்கரம் நீட்டு....
இறைவன் உன் கரம் பற்றுவார்..

# சிவத் தமிழ்

அன்பே சிவம்! சிவமே தமிழ்!!

மலர் 12 2016 இதழ் 28





ஆரம்பம் 2004



பிரதம ஆசிரியர்
கலைஞானமணி
கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A

Tel.02351 458862
e.mail. vettimaniy@hotmail.com

உதவி ஆசிரியர்
ஆன்மீகத்தென்றல்
த.புவனேந்திரன்


கௌரவ ஆசிரியர்
கலாநிதி கவிஞர் வி.கந்தவனம்
“இலக்கியச் செம்மல்”
இந்து மகேஷ்

யேர்மனி
Brinker Höhe 13
58507 Lüdenscheid - Germany
0163 199 2 333

இலங்கை
திருமதி.வலன்ரீனா இளங்கோவன்.M.A
தபால்பெட்டி ஒழுங்கை
பலாலிவீதி
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்
யாழ்ப்பாணம்



Published by
Vettimaniy Ltd U.K

## இனிய சங்கமம்



# நானும் நானும்

எவ்வளவு புனிதமான இடமாக இருக்கலாம். பூக்கள் மலரும் ஓசைமட்டும் கேட்கும் அமைதியான இடமாக இருக்கலாம்.கள்ளம் கபடமற்ற குழந்தைகளுடன் மகிழ்சியாக இருக்கும் பொழுதாக இருக்கலாம். ஆனால் அப்பொழுதிலும் என்னுள் நான் உறங்காமல் விழித்திருந்தால் என்வென்று சொல்வது,மனதை!

நாணை விட்டு அம்பு புறப்பட்டு இலக்கை அடைய வேண்டுமென்றால், எவ்வளவுதான் விசையாக இழுத்தாலும் அதனை விட்டுத்தான் ஆகவேண்டும். அப்போது தான் வில்லு விசையாகத் தன் இலக்கு நோக்கிப் பாயும்.

இந்த ஆன்மாவின் இலக்கு இறைவனை அடைவதுதான். அதற்கு நான் என்ற நாணை விட்டாகவேண்டும். இல்லையேல் இறைவனை அடையும் இலக்கு இப்பிறவியில் கிட்டாது.

நான் வரமுடிவில்லை

நான் பல விழாக்களுக்கு செல்லவேண்டி இருந்தது

நான் இல்லை என்றால் குறை சொல்வார்கள்

நான் தான் நின்று செய்யவேண்டும்

நான் அந்த இடத்தில் நின்றபடியால்தான் சிறப்பா சில விசயங்களைச் செய்யமுடிந்தது.

நான் இல்லை என்றால் அங்கு ஒன்றும் நடக்காது.

நான் பார்த்து வாங்கினால்தான் அவர்களுக்குத் திருப்தி.

நான் இனி என்னுடைய பாட்டைப் பார்க்கப் போகின்றேன்.

நான் வளர்த்த, வளர்ப்பால் பிள்ளைகள்,ஏதோ நல்லாயிருக்கினம்.

இப்படி நன்மை செய்வதற்கே

“எத்தனை நான்” முன்வந்து உள்ளது.

வாய் திறந்தால் வெளிவருவது நான்.

பிறரைப்பற்றி, பிறர், சேவையைப்பற்றி, சொல்வதாக வைத்துக் கொண்டாலும், இறுதியில் அவருக்கும் நமக்கும் ஒரு முடிச்சு தேடிப்பிடித்து போட்டுக் கொள் வோம்.

என்னால்தான் அவர் உயர்ந்தார். நான் முடிந்ததை அவருக்கு செய்தேன். நான் பிறர் நல்லாயிருந்தால் போதும் என்று நினைப்பவன். இப்படியாக, எப்படியோ அந்த “நான்” அங்கும் தலைதூக்கிவிடும்.

எல்லாம் அவன் செயல் என்று நாம்தான் சொல்லுகின்றோமே அன்றி, ஆண்டவன் ஒரு போது “நான்தான்” என்று சொல்லவில்லை.

இந்த உலகில் நான் என்று பேச ஆரம்பிவர் முன் கடவுள் கூட நாணிப்போகிறார்.கொஞ்சம் நானை விட்டுப்பாருங்கள் உங்கள் மனம் ஆண்டவனை நோக்கிச் செல்வதை உணர்வீர்கள்.

மு.க.சு.சிவகுமாரன்

# ஆரவாரங்களுக்கு நடுவேயும் நீங்கள் தியான நிலையில் இருக்க முடியும்!



தியானம் ஒருவனை உள்நோக்கிப் பயணம் செய்யச் சொல்கிறது. எண்ணங்களை எந்த விதமான தணிக்கைகளும், தீர்ப்புகளும் இன்றி கவனிப்பது முக்கியம். இனி இந்த எளிய தியானத்தை எப்படி செய்வது என்றால்......

1. அமைதியான இடத்தில் சௌகரியமாக அமர்ந்து கொள்ளுங்கள்.

2. இயல்பாக மூச்சுவிட்டு மூச்சு சீராகும் வரை மூச்சில் கவனம் செலுத்துங்கள்.

3. இனி உங்கள் எண்ணங்களை விருப்பு, வெறுப்பு இல்லாமல் கண்காணியுங்கள்.

4. இந்த எண்ணம் நல்லது. இந்த எண்ணம் கெட்டது என்ற பாகுபாடுகள் வேண்டாம். வெறுமனே கவனியுங்கள். உங்கள் எண்ணங்களுக்கு நீங்கள் பார்வையாளனாக இருங்கள்.

5. கூர்மையாக கவனிக்கப்பட, கவனிக்கப்பட மனதின் எண்ணங்களின் எண்ணிக்கை, வேகம் குறைய ஆரம்பிக்கும். ஒரு பார்வையாளனின் தொடர்ந்த கண்காணிப்பில் எவர் செயல்களும் சற்று குறையவே செய்யும். மனமும் அதற்கு விதிவிலக்கல்ல.

6. ஒரு எண்ணம் மனதில் எழுகிறது. அதைக் கவனிக்கிறீர்கள். இன்னொரு எண்ணம் எழுகிறது. அதையும் கவனிக்கிறீர்கள். எண்ணங்கள் குறையக் குறைய இன்னொரு அழகான அனுபவமும் நிகழும். அது என்ன தெரியுமா? ஒரு எண்ணம் முடிந்து, இன்னொரு எண்ணம் எழுவதற்கு இடையே உள்ள இடைவெளி. அதையும் கவனியுங்கள். அந்த இடைவெளியில் தான் மனம் மௌனமாகிறது. அது தான் மனமில்லா நிலை. அது மிக அழகான அனுபவம்.

7. எண்ணம் - இடைவெளி என ஒவ்வொன்றையும் எந்த விமர்சனமும் இன்றி கவனியுங்கள். ஆரம்பத்தில் சில மைக்ரோ வினாடிகள் தான் அந்த இடைவெளி இருக்கும். உங்கள் தியானம் ஆழமாக, ஆழமாக அந்த இடைவெளிகளின் கால அளவும் அதிகரிக்கும். அந்த மனமில்லா நிலை தான் தியானத்தின் உச்சக்கட்டம்.

8. ஆனால் இடைவெளிகளையே அதிகம் நீங்கள் எதிர்பார்த்தால் தோற்றுப் போவீர்கள். ஏனென்றால் இடைவெளியின் மீது உங்களுக்கு விருப்பம் ஏற்பட்டுவிட்டது என்றால் விருப்பு, வெறுப்பற்ற பார்வையாளனாக இருக்க உங்களுக்கு முடியாது. அது முடியாவிட்டால் தியானமும் நிகழாது.

9. எண்ணம் எழுவதைக் கவனிப்பதும் ஒன்றுதான். இடைவெளி வருவதைக் கவனிப்பதும் ஒன்றுதான் என்கிற சமமான மனோபாவமே இங்கு முக்கியம். சூரிய ஒளியை ரசிக்கிறீர்கள். அடுத்ததாக மேக மூட்டம் வருகிறது. அதையும் ரசிக்கிறீர்கள். இதில் நீங்கள் எதையும் தேர்ந்தெடுப்பதில்லை. நிகழ்வதைக் கவனிக்கும் சம்பந்தமில்லாத பார்வையாளனாக இருக்கிறீர்கள். இது தான் சரியான மனநிலை.

10. தியானம் ஆழப்பட்ட பின் பேரமைதியை நீங்கள் உணர ஆரம்பிப்பீர்கள். விருப்பு, வெறுப்பில்லாத அந்த பார்வையாளனின் மனோபாவம், உங்களிடம் உறுதிப்பட ஆரம்பிக்கும். அது தியான சமயங்களில் பூரணமடைந்தால் மற்ற நேரங்களிலும், உங்களிடம் தங்க ஆரம்பிக்கும். தினசரி வாழ்க்கையே தியானம் ஆக ஆரம்பிக்கும். ஆரவாரங்களுக்கு நடுவேயும் நீங்கள் தியான நிலையில் இருக்க முடியும்.




# மாணிக்கவாசகரும்
# மகளிர் பாடல்களும்

**- கலாநிதி கவிஞர் வி.கந்தவனம்**

நாயன்மார்களில் மகளிர் பண்பாட்டை நயமுறப் பயன்படுத்திப் பக்தியை வளர்த்தவர் மாணிக்கவாசகர். திருவாசகத்தில் வரும் 51 பதிகங்களில் 11ல் பெண்களைக் கொண்டு இறைவன் பெருமையை உலகத்தாருக்கு உணர்த்தும் பணி ஒன்று மேற்கொள்ளப் பட்டிருக்கின்றது. இவற்றில் எட்டுப் பதிகங்கள் ஆடல்களோடு கூடியவை.
பெண்கள் முதன்மை பெறுகின்ற ஒரு பதிகம் திருவெம்பாவை. திருவண்ணாமலையில் மாணிக்கவாசகர் தங்கியிருந்த காலத்தில் இளம் பெண்கள் அதிகாலையில் துயில் நீக்கி எழுந்து நீராடச் செல்வதைக் கண்டிருக்கின்றார். காணுகின்ற காட்சிகள் அனைத்தையும் சிவகாட்சி களா கவே காண்கின்ற பக்குவம் பெற்ற அவர், பெண்கள் தங்கள் மலம் கழுவ எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த பொங்கும் மடுவுக்குச் செல்வதாகவே காண்கின்றார்.

காட்சி அற்புதமான திருவெம்பாவைப் பாடல்களாக அவர் உள்ளத்திலிருந்து ஊற்றெடுக்கின்றது. அதில் பெண்களைக்கொண்டு சிவனுடைய பெருமையைப் பேசவைக்கின்றார். சைவசித்தாந்த முப்பொருள் உண்மைகளை விளக்குகின்றார். பசு பாசங்களைக் களைய முனைவதும் பதியை அடைய விழைவதும் எமக்கும் பாடங்களாகின்றன. அவற்றில் முக்கியமான ஒரு பாடம் இது:

**முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே**
**பின்னைப் புதுமைக்கும் பெயர்த்தும் அப்பெற்றியனே**
**உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்**
**உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்**
**அன்னவரே எங்கணவர் ஆவார் அவருகந்து**
**சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்**
**இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்**
**என்ன குறையுமிலோம் ஏலோர் எம்பாவாய்.**

இதிற் சைவப் பெண்கள் பின்பற்ற வேண்டிய பண்பாட்டை முன்வைக்கின்றார் மணிவாசகப் பெருமான். சைவப் பெண்கள் சிவனடியார்களையே மணம்புரிய வேண்டும் என்கிறார். அவ்விதம் செய்தால் என்ன குறையும் இல்லாமல் அவர்கள் வாழ்வார்கள். சிவனடியார்கள் பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள் ஆதலால் இல்லற வாழ்க்கை இணையற்ற வாழ்க்கையாக அமையுமன்றோ. இதனையே 'மனையுள் இருந்தவர் மாதவர் ஒப்பார்' என்றார் திருமூலநாயனாரும்.

பெண்கள் நீராடியபின் அண்ணாமலையானை வணங்கிய காட்சிகளைத்தான் மாணிக்க வாசகர் கண்டிருக்கின்றார். அவர்கள் இறைவனிடம் என்ன கேட்டார்கள் என்பது அவரது திருச் செவிகளுக்கு எட்டியிருக்க வாய்ப்பில்லை. கன்னிப் பெண்கள் தங்கள் வருங்கால வாழ்க்கைபற்றிய கருத்துடையவராதலால் நல்ல கணவர் தமக்கு வரவேண்டும் என்று நினைத்திருப்பர். பிறருக்குக் கேட்குமாறு வரம் கேட்பது பெண்கள் இயல்பில் இல்லை. நினைத்தார்களோ இல்லையோ மாணிக்கவாசகர் அவர்களுடைய வாழ்க்கை நல்லவண்ணம் அமைய வேண்டும் என்று தாமே வேண்டுகிறார். சைவம் வளர்வதற்குப் பெண்களின் பங்கு அதிகமாக இருக்க வேண்டும் என்று அவர் கருதுகின்றார். அந்தப் பங்களிப்பை அவர்கள் செவ்வனே செய்யவேண்டுமானால் அவர்களுக்கு நல்ல கணவர் வாய்த்தல் வேண்டும். அக் கணவர் சிவனடியாராக இருந்தாலே அது சாத்தியமாகும்.

# மாணிக்கவாசகரும்....



**உன்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்**

இதே கருத்து 'உன்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்' என்று தொடங்கும் பாடலிலும் வலியுறுத்தப் படுகின்றது.

கன்னிப் பெண்களும் அவர்களது பெற்றோரும் இதுபற்றிச் சிந்தித்துச் செயற்படின் எமது சமுதாயம் இப்பொழுது இருப்பதிலும் சிறப்புறும் என்பது உறுதி.

தொடர்ந்து வருவது திருவம்மானைப் பதிகம். அம்மானை என்பது ஒருவகை மகளிர் விளையாட்டு. இதிற் பெண்கள் மரப் பந்துகளை உயர எறிந்து ஏந்திப் பிடிப்பர். இந்த ஆடலில் பாடப்படும் பாடல் அம்மானை வரி எனப்படும். சக்தியைப் பற்றிய அல்லது பெண்களைப் பற்றிய பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தங்களில் அம்மானைப் பருவம் என்ற பகுதி ஒன்றுண்டு. அது பெண்குழந்தையை அம்மானை ஆட அழைக்கின்ற பருவமாகும். அந்த அளவுக்கு அம்மானை விளையாட்டுத் தமிழர் மத்தியில் அக்காலத்திற் பிரபலிய மாக இருந்தது.

அப்படி ஒரு விளையாட்டையும் திருவண்ணாமலையில் இருந்த காலத்திலே மணிவாசகப் பெருமான் பார்த்திருத்தல் வேண்டும். அதனையும் இறைவன் புகழைப் பாடுவதற்குப் பயன் படுத்தியிருக்கின்றார். நிலத்தில் வந்து தங்களை ஆட்கொள்ளும் இறைவனின் கருணையை நினைந்து பெண்கள் பாடுவது கவனிக்கத் தக்கது.

அடுத்து இடம்பெறுவது திருப்பொற்சுண்ணம். இது ஓர் உரற்பாட்டு. உரலில் நெல் குற்றுவது, மா இடிப்பது எமது பெண்கள் கிராமப்பறங்களிலே இன்றும் செய்து வருகின்ற இல்லறத் தொழிற்பாடாகும். சுண்ணம் என்பது பொடி. மகளிர் குளிப்ப தற்கும் குளித்தபின் தம்மை அலங்கரிப் பதற்கும் பலவகையான பொடிகளை உரலிலே இடித்துத் தயாரிப்ப துண்டு. திருப்பொற் சுண்ணத்தில் இறைவனை அலங்கரிக்கப் பெண்களைக்கொண்டு வாசனைப் பொடி இடிப்பிக் கின்றார் மாணிக்கவாசகர்.
பொடி பொன்னிறமாதலால் பொற்சுண்ணம் எனப்பட்டது. பொற் சுண்ணத்தை இடிக்கையில் பெண்கள் தனு கரண புவன போகங்களை இறைவனுக்குச் சுண்ணமாக்குகின்றனர் என்பது தத்துவம்.

மற்றுமொரு மகளிர் ஆடல் தெள்ளேணம். மகளிர் தோள்கொட்டிச் சுழன்று சுழன்று பாடி ஆடுகின்ற விளையாட்டு. திருத்தெள்ளேணம் மகளிர் சிவன்சீர் பாடி அவனைச் சென்று கூட விரும்பும் வகையிற் பாடப்பட்டுள்ளது.

திருத்தெள்ளேணத்தை அடுத்து வருவது திருச்சாழல்.
சாழல் என்பதும் ஒருவகை மகளிர் விளையாட்டாகும். இந்த விளையாட்டைச் சிவனது அருட்சத்தியை உணர்த்த மணிவாசகப் பெருமான் பயன்படுத்தியுள்ளார்.

திருச்சாழற் பதிகத்தைத் தொடர்ந்து இடம் பெறுவது திருப்பூ வல்லி என்ற பதிகம். பெண்கள் பூக்களைக் கொய்கையிற் பாடுவதாக அமைந்த இப்பதிகம் மாயையின் சக்தியைத் தடுத்து நிறுத்துதல், சிவபிரான் தேடிவந்து ஆண்ட நலம்சொல்லி வியத்தல் முதலியவை கூறப் படுகின்றன.

அடுத்து வருவது திருவுந்தியார். உந்துதல் என்ற சொல்லுப் பல பொருள்களையுடையது. அவற்றில் ஒன்று தள்ளுதல் என்பது. இதில் மகளிர் தமது கைகள் இரண்டையும் சேர்த்து ஒருவரை ஒருவர் தள்ளி (உந்தி) விளையாடுவர். உந்தி பறத்தல் என்றும் இது அழைக்கப்படும்.

திருத்தோள் நோக்கம் என்பதும் ஒரு மகளிர் விளையாட்டாகும். இதில் மகளிர் ஒருவர் தோளை ஒருவர் பார்த்தும்(நோக்கியும்) தொட்டும் விளையாடுவர். திருத்தோள் நோக்கத்தில் திருவருளோடு ஒன்றிநிற்கும் திறம் வெளிப்படுத்தப் படுதலைக் காணலாம்.

தொடர்ந்து வருவது திருப்பொன்னூசல்.

**தொடர்ச்சி 08ம் பக்கம்.**

# திருமந்திரத்தில் உள்ள
# உடற் கூற்று அறிவியல்

(சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி)



திருமூலர் திருமந்திரத்தில் உடலின் முக்கியத்துவத்தை மிகத் தெளிவாக

**"உடம்பார் அழியில் உயிரார் அழிவர்**
**திடம்பட மெய்ஞானம் சேரவும் மாட்டார்**
**உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே**
**உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே".**

என்னும் பாடல் மூலம் உடலானது நன்றாக இருந்தால்த்தான் வாழ்வில் இன்பம் நிலவும். உடல் நலம் பாதிக்கப்பட்டால் நோய் உண்டாகி இறை சிந்தனையில் ஈடுபட முடியாமல் போவது மட்டுமல்லாமல் மரணத்தையும் ஏற்படுத்தும் எனக் கூறியுள்ளார். அத்துடன் உடம்பு அழிந்தால் உயிரும் உடலைவிட்டு நீங்கி விடும். எனவே உடம்பை அழியாது காக்கும் வழியை நான் அறிந்துகொண்டேன் என

**"உடம்பினை முன்னம் இழுக்குஎன்று இருந்தேன்**
**உடம்பினுக்கு உள்ளே உறுபொருள் கண்டேன்**
**உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான்என்று**
**உடம்பினை யான்இருந்து ஓம்புகின் றேனே."**

என்னும் பாடல் மூலம் உடம்பை வெறும் பாவச்சுமை என முன்பு நினைத்திருந்தேன். பின்புதான் உடம்பிற்குள்ளே பரம்பொருள் கோயில்கொண்டிருப்பதை அறிந்தேன். இதனால் உடம்பைப் பேணிப் பாதுகாத்து வருகிறேன் எனக் கூறியுள்ளார்.
திருமூலர் எண் சாண் உடம்பு உருவாகுவதை

**"சுக்கில நாடியில் தோன்றிய வெள்ளியும்**
**அக்கிர மத்தே தோன்றுமவ் வியோனியும்**
**புக்கிடும் எண்விரல் புறப்பட்டு நால்விரல்**
**அக்கரம் எட்டும்எண் சாணது வாகுமே".**

என்னும் பாடலில் கரு உருவாகும்போது பெண் பதின்இரண்டு விரற்கட்டை மூச்சை உள்ளெடுத்து நாலு விரற்கட்டை மூச்சை வெளிவிடும்போது தங்கும் எட்டு விரற்கட்டை மூச்சால் எண்சாண் உடம்பு உருவாகிறது எனக்கூறியுள்ளார். இதை ஐந்துபூதங்களைக் குறித்த "ல" கரம் (நிலம்)இ "வ" கரம் (நீர்), "ர" கரம் (நெருப்பு), "ய" கரம் (காற்று,உயிர்), "அ" கரம் (ஆகாயம்) ஆகிய ஐந்தும் ஓம் என்னும் பிரணவத்தின் "அ" கர, "உ" கர, "ம" கரம் என்னும் மூன்றுமாக எட்டு எனவும் பொருள் படும்.

**திருமூலர் உடம்பு ஐம்பூதங்களான**

1.நிலம் தோல், எலும்பு, நரம்பு, தசை, மயிர்
2.நீர் பித்தம், இரத்தம், விந்து, கசிவு அல்லது கழிவு, வியர்வை
3.நெருப்பு பசி, தாகம், தூக்கம், சோம்பல், பயம்
4.காற்று ஓடல், இருத்தல், நடத்தல், கிடத்தல், தத்தல்
5.ஆகாயம் குரோதம், உலோபம், மோகம், மதம், பொறாமை ஆகியவற்றால் ஆனது என்பதை

**"ஆரே அறிவார் அடியின் பெருமையை**
**யாரே அறிவார் அங்கவர் நின்றது**
**யாரே அறிவார் அறுபத்துஎட்டு யாக்கையை**
**யாரே அறிவார் அடிக்காவல் ஆனதே".**

என்னும் பாடலில் கூறியதுடன் முப்பதிஎட்டு புறக்கருவிகளுடன் சேர்த்து உடல் அறுபத்திஎட்டு கூறுகள் எனக் கூறியுள்ளார்.
திருமூலர் உடலில் உள்ள உயிர் காந்த சக்தியாகிய, உடலின் உட்பகுதியிலுள்ள இரசாயனங்களை உற்பத்தி செய்து இரத்தத்தின் வழியாக உடல் முழுக்கப் பரவச் செய்யும் நாளமில்லாச் சுரப்பிகளான....
ஆறு ஆதார நிலைகளை அதாவது சக்கரங்களை (இவற்றை தாமரை மலர்கள் எனவும் கூறுவர்) விரிவாக

**"நாலும் இருமூன்றும் ஈரைந்தும் ஈராறும்**
**கோலிமேல் நின்ற குறிகள் பதினாறும்**
**மூலம்கண்டு ஆங்கே முடிந்து முதல் இரண்டும்**
**காலம் கண்டான்அடி காணலும் ஆமே"..**

தொடர்ச்சி மறுபக்கம்

7ம் பக்கத் தொடர்ச்சி **திருமந்திரத்தில் உள்ள ..**

என்னும் பாடல் மூலம் குண்டலினி சக்தியை மூலாதாரத்திலிருந்து எழுப்பி

1. முதலாவது சக்கரம் மூலாதாரம் பாலுணர்வுச் சுரப்பி (Sexual Gland)
2.இரண்டாவது சக்கரம் சுவாதிட்டானம் அட்ரினல் சுரப்பி (Adrenal Gland)
3.மூன்றாவது சக்கரம் மணிபூரகம் கணையம் (Pancreas)
4.நாலாவது சக்கரம் அனாகதம் தைமஸ் (Thymus)
5.ஐந்தாவது சக்கரம் விசுத்தி தைராயிட் சுரப்பி (Thyroid Gland)
6.ஆறாவது சக்கரம் ஆக்கினை பியூட்டரி சுரப்பி (Pituitary Gland)

ஆகிய ஆதாரநிலைகளில் ஒன்றச் செய்து இறுதியில் ஏழாவது சக்கரமான துரியத்தை பீனியல் சுரப்பி(Pineal Gland) (சகஸ்ர தளம்) அடையச்செய்வதன் மூலம் இறைவனைக் காணலாம் எனக் கூறியுள்ளார்.

திருமூலர் உடம்பில் உள்ள பத்து வாயுக்களான (பிராண சக்தி அல்லது உயிர்ச் சக்தி),1.பிராணன் (24% உடலின் முழுப்பாகமும் சரியாக இயங்கச் செய்வது)இ 2.அபானன் (12% கழிவுப் பொருட்களை வெளியேற்றுதல்), 3.உதானன் (6% சிறு நரம்புகளை இயக்குதல்)இ 4.வியானன் (9% உடலினை இயக்குவது), 5.சமானன் (9% தேவையான சக்தியைத் தேவையான உறுப்புக் களுக்குப் பங்கிடுதல்), 6. தேவதத்தன் (8% கண்ணிமைகளை இமைக்கச் செய்வது), 7. தனஞ்சயன் (8% உயிர் போனபின் உடலை வீங்கி வெடிக்கச் செய்வது), 8.கூர்மன் (8% தொடு உணர்வைக் கொடுப்பது), 9. விகுண்டன் (8% மல சலத்தைக் கட்டுப் படுத்துவது),10.சாத்தீகன் (8% சுக, துக்கங்களை அளவிடுவது). ஆகியன வற்றைப் பற்றி

**போகின்ற எட்டும் புகுகின்ற பத்தெட்டும்**
**மூழ்கின்ற முத்தனும் ஒன்பது வாய்தலும்**
**நாகமும் எட்டுடன் நாலு புரவியும்**
**பாகன் விடானெனிற் பன்றியு மாமே".**

அருவமாயுள்ள சுவை, ஒளி, ஊறு, ஓசை, வாசம், மனம், புத்தி, அகங்காரம், ஆகிய எட்டும், உள்ளே வருகின்ற பத்து வாயுக்களுடன் காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம், துன்பம், அகங்காரம், ஆகிய எட்டுடன் சேர்த்துப் பதினெட்டும் சேர்ந்த உடம்பில் ஒன்பது வாயில்களான இரண்டு கண்கள், இரண்டு நாசித் துவாரங்கள், வாய், இரண்டு காது, சல வாயில், மல வாசல் என்பனவற்றுடன் குண்ட லினியும் (மூலாதாரம்) பதின்ரண்டு விரற் கட்டை மூச்சுக்காற்றும் இறைவனால் சரியாகக் கையாளப் படாவிட்டால் பிறப்பு வீணே எனக் கூறியுள்ளார்.

## மாணிக்கவாசகரும் 6ம் பக்கத் தொடர்ச்சி

தொடர்ந்து வருவது திருப்பொன்னூசல். ஊசல் என்பது ஊஞ்சல். இதில் மகளிர் ஊஞ்சல் ஆடியவாறு இறைவனின் அருள் திறத்தை வாயாரப் பாடுகின்றார்கள். இதனைத் தொடர்ந்துவரும் அன்னைப் பத்து, குயிற் பத்து ஆகிய பதிகங்கள் சற்று வித்தியாசமானவை; ஆடல்கள் இல்லாதவை; பல பெண்களின் பங்களிப்பும் இல்லாதவை. அன்னைப் பத்தில் தனியொரு பெண் தலைவன்பால்(இறைவன்பால்) தன்னை இழந்து பாடுகின்றாள். குயிற் பத்தில்,

கீதம் இனிய குயிலே கேட்டியேல் எங்கள் பெருமான்
பாதம் இரண்டும் வினவின் பாதாளம் ஏழினுக் கப்பால்

சோதி மணிமுடி சொல்லின் சொல்லிறந்து நின்ற தொன்மை
ஆதி குணம் ஒன்றும் இல்லான் அந்தமிரான் வரக் கூவாய்



என்று சிவனோடு கூடும் குறிப்புடன் ஒரு பெண் குயிலைத் தூது விடுகின் திருவாசகத்தில் வருகின்ற பெண்கள் யாவரும் ஆன்மாக்கள். ஆன்மாக்க இறைவனைச் சேரவிழையும் செயற்பாடுகளையே மணிவாசகப் பெருமான் மிக உருக்கமாகப் பாடியருளியிருக்கின்றார்.
ஆன்மாக்களைப் பெண்களாக உருவகப்படுத்தாத ஏனைய இடங்களில் மாணிக்கவாசகர்தாம் பெண். அவர் இறைவனை அடையத் துடிக்கும் காதலே திருவாசகம்.



# வழிபாட்டில் வாழை

-முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்-



வழிபாட்டு நடைமுறைகளில் வாழைமரத்திற்குச் சிறப்பான இடம் வழங்கப் பெற்றுள்ளது. மனித வாழ்வியலில் 'வாழையடி வாழை' என்ற சிறப்பான வாழ்த்துரையும் வழக்கிலுண்டு. வளத்திற்கும், செழிப்புக்கும், பசுமைக்கும் வாழை எடுத்துக் காட்டாக விளங்குகிறது. வழிபாட்டு நடைமுறைகளில் தூய்மையான இடத்தை வரையறை செய்ய வாழைமரம் நாட்டப்படும். நான்கு மூலைகளிலும் வாழை மரங்களை நட்டு அவற்றை மாவிலை. தோரணங்களால் தொடுத்து விடும் நடைமுறை இன்றும் நடைமுறையாக உள்ளது.

வாழை மரங்களில் பல இனங்கள் இருந்த போதும் கதலிவாழையே வழிபாட்டு நடைமுறைகளில் பெரிதும் பயன்படுத்தப்படுகிறது. இதனால் 'கதலிப்பழம்' எனச் சிறப்புப் பெயரும் வழங்கப்படுகிறது. மனிதவாழ்வியலில் வாழை பெரும் பயன்தரும் மரமாக விளங்குகிறது. வாழை இலை உணவருந்தும் பரிகலமாகப் பயன்படுத்தப்படுகிறது. இம்மரத்தின் தண்டு, காய், பூ, பழம் என்பன உணவாகப் பயன்படுகின்றன. வாழைப்பூவின் சுவை அறுசுவைகளில் ஒன்றாகத் திகழ்கிறது. வாழைக்குலையில் நிறையப் பழங்கள் இருக்கும். அவை சீப்புகளாக நெருக்கமாக இருப்பது கண்ணைக் கவரும் காட்சியாகும்.


தெய்வத்திற்கு மடைபோடும் போது நீண்டதலை வாழையிலைகளைப் பரப்பி அதன் மேல் வாழைக்குலைச் சீப்புகளை குன்று போல அடுக்கி வைப்பர். அவை பூசை முடிந்த பின்னர் எல்லோருக்கும் பகிரப்படும். பொதுவாக ஒரு வாழைக்குலையில் பத்துச் சீப்புகள் இருக்கும். ஒவ்வொரு சீப்பிலும் முப்பதுக்குக் குறையாமல் பழங்கள் இருக்கும். எனவே ஒரு வழிபாட்டு நடைமுறையிலே பங்கு கொள்ளும் அனைவரும் வாழைப்பழம் பிரசாதமாகப் பெற்றுச் செல்லமுடியும். மடைபரவும்போது வாழைக்கனிகளின் கீழ்ப்பாகத்தையும் மேற்பாகத் துத்தண்டையும் வெட்டி விடுவர். இதனைக் கிராமப்புறங்களிலே இன்னமும் நாக்குமூக்குத் தள்ளுதல் என்பர். இதற்குக் காரணம் பழத்தை உண்ணும் போது எளிதாகத் தோலை உரிப்பதற்காகவே எனக் கருத இடமுண்டு.

பொங்கல் மடைபோடும் போது வாழையிலையிலே பொங்கலைப் பரவி அதன் மேல் தயிரை ஊற்றி அதற்கு மேல் தோலுரித்த வாழைப்பழத்தை வைப்பர். வாழைப்பழம் முக்கனிகளில் முதன்மையானதாக விளங்குகிறது. வாழை, பலா, மா என்னும் முக்கனிகளில் பலாவும் மாவும் ஒரு பருவ காலத்தில்தான் பழத்தை நல்கும். ஆனால் வாழையோ ஆண்டு முழுவதும் பலன் தரும். மேலும் ஒரு குலை ஈன்ற வாழையின் வாழ்வு அத்துடன் முடிந்துவிடும். அதனுடைய குட்டிகள் தொடர்ந்து பயன்தரும். 'வாழைக்குத் தான் ஈன்ற காய் கூற்றம்' என்ற ஒரு முதுமொழியும் வழக்கிலுண்டு. வாழைப்பழம் மஞ்சள் நிறமானது. ஆனால் ஓரிருநாட் சென்றால் அப் பழத்தின் மேல் கரும்புள்ளி தோன்றிவிடும். அத்தகைய பழங்கள் தெய்வமடைப் பொருளாக ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

வழிபாட்டு நடைமுறைகளில் வாழைத் தடலும் வாழைநாரும் கூடப்பயன் படுத்தப்படுகின்றன. வாழைத்தடல் பூசைக்குரிய மலர்களைச் சேகரிக்கும் கூடை செய்வதற்குப் பயன்படுத்தப்படுகிறது. வாழைநார் இறைவனுக்குச் சூட்டும் மாலைகளைக் கட்டுவதற்குப் பயன்படுத்தப்படும். இதனால் 'பூவுடன் கூடிய நாரும் புனிதர் முடிக்கு அணியாகும்' என்ற முது மொழியும் உருவாகியுள்ளது.

தொடர்ச்சி 10ம் பக்கம்.

9ம் பக்கத் தொடர்ச்சி **வழிபாட்டில் வாழை**



வாழைப்பழம் தெய்வமடைப் பொருளான 'பஞ்சாமிர்தம்' என்னும் முழுக்குப் பொருளிலும் இணைந்து உள்ளது. பஞ்சாமிர்தத்தில் வாழைப்பழம், பலாப்பழம், மாம்பழம் என்னும் முக்கனிகளும் தேனும் நெய்யும் சேர்ந்திருக்கும். பலாப்பழம், மாம்பழம் கிடையாதபோது வேறு சில பழங்களைச் சேர்க்கும் வழக்கம் இப்போது நடை முறையாகி விட்டது. ஆனால் வாழைப்பழம் எப்போதுமே பஞ்சாமிர்தத்தில் இணைந்திருக்கும் சிறப்பு உடையது.

வீட்டு வழிபாட்டு நடைமுறைகளிலும் வாழைப்பழம் சிறப்பாகப் பயன்படுகிறது. 'விளக்கடியில் வைத்தல்' என வீட்டில் நடைபெறும் சிறுமடையில் வாழைப்பழம் தனியிடம் பெற்றிருக்கும். வழிபாட்டில் சிறப்பாக இடம் பெற்றிருந்த வாழை தற்போது விழாக்களிலும் தனிச்சிறப்புப் பெற்று விட்டது. வாசலிலே வாழை மரம் நாட்டியிருந்தால் அங்கு ஏதோ விழா நடைபெறவுள்ளது. என்பது அறிவுறுத்தப்படுகிறது. மங்கல நிகழ்வுகளில் மட்டுமன்றி அமங்கல நிகழ்வுகளிலும் வாழை கட்டப்படும். ஆனால் மங்கல நிகழ்வுகளில் வாழை பழக்குலையுடன் நிற்கும். அமங்கல நிகழ்வுகளில் வாழை காய்க்குலையுடன் காட்சிதரும். மேலும் அலங்கார நிலையிலே வாழைக்குட்டிகளை நட்டு அவற்றோடு மாவிலைத் தோரணங்களைத் தொடுத்து விடுவது மரபாகவுள்ளது.

வாழைத்தோட்டம் திருக்கோயில்களுக்கு அருகே செய்கின்ற வழக்கமும் தொடர்கிறது. நாளாந்தம் வழிபாட்டு நடைமுறைகளுக்கும் அன்னதானத்திற்கும் திருவிழா அலங்காரங்களுக்கும் வாழை பயன்படுவதால் வாழைத்தோட்டம் இன்றியமையாததாக விளங்கியுள்ளது. சமயகுரவர்கள் திருக்கோயில்களைப் பற்றிப் பாடிய பதிகங்களிலே இதனைப் பதிவு செய்து உள்ளனர்.

ஆனால் இன்று வழிபாட்டு நடைமுறைகளில் வாழையின் தோற்றமும் மாறிவிட்டது. விஞ்ஞானக் கண்டு பிடிப்பான பிளாஸ்ரிக் வாழைமரம் குலையோடு நிற்கிறது. வெளிநாடுகளிலே வாழை பயிரிடமுடியாத காலநிலையில் பிளாஸ்ரிக் வாழைமரங்களை வழிபாட்டிற்குப் பயன்படுத்தும் நிலை ஏற்பட்டது. அதை வாழை பயிரிடும் வளமுள்ள நாடுகளிலும் பயன்படுத்துவது பொருத்தமற்றது. வாழை மரம் வெறுமனே ஒரு அழகுதரும் மரமென நமது முன்னோர் எண்ணவில்லை.
அந்த மரத்தின் இயல்பு மனிதவாழ்வியலை நெறிப்படுத்துவதை நன்கு உணர்ந்திருந்தமையால் அதனை வழிபாட்டு நடைமுறையில் பயன்படுத்தினர். 'வாழையடிவாழையாக' மனித வாழ்வு வளம் பெற வேண்டும் என எண்ணினர். அவர்களுடைய பொதுநலப் பண்பாட்டை நாமும் பேண வேண்டும். நமது தலைமுறையினருக்கும் பயிற்ற வேண்டும். வழிபாட்டில் இணைந்து வாழை எமது வாழ்வியலும் பல நிலைகளிலே தொடர்புற்று இருப்பதை நாம் மறந்து விடக் கூடாது.

Hückelhoven நகரில்

**Asiatischer Super markt**

**ஆசியா சமுத்திரம்**

துரித பணமாற்றுச் சேவை

பசுமையான மரக்கறிகள்
மளிகைப்பொருட்கள் அனைத்தும் தரமாகவும்
மலிவாகவும் கிடைக்கும்.

**R.Ragunathan**
Deutschebank
IBAN: **DE55 3907 0024 0474 1153 00**
Bic:**DEUTDEDB390**
Email: mediajara@gmail.com
Parkhofstraße-101
41836 Hückelhoven
Fax: 02433 903281
**Handy:01520 900 90 30**

**Vijay tv agent**



**T.Anpalagan**
Asiatischer super markt
Sittard str-21
41061-Mönchengladbach
Fax:02161- 9028399

**Tel: 02433 903282**

சிவத்தமிழ் சிறக்க வாழ்த்துகிறோம்

**Tel: 02161- 9028388**

# தமிழரின் தொன்மையைக் குறிக்கும் வேல் வணக்கம்

**"செந்தமிழ்ச் சொல்லருவி" ச.லலீசன் (M.A., M.Ed.)**

சிரேஷ்ட விரிவுரையாளர்,கோப்பாய் ஆசிரிய கலாசாலை



தொன்மையைப் பற்றி நாம் எண்ணும்போதே 'கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தில் முன்தோன்றிய மூத்தகுடி" என்ற வாசகம் நினைவுக்கு வந்துவிடுவதுண்டு. நீரே முதலில் தோன்றியது என்றும் அதனைத் தொடர்ந்து நிலம் தோன்றியதென்றும் விஞ்ஞானிகள் எடுத்துரைப்பர். நிலத்தில் முதல் தோன்றிய கூறு கல். அதாவது மலை. மலைக்கடவுள் என்ற சிறப்புடன் விளங்கும் முருகவழிபாடு தமிழருக்குரித்தான வழிபாடு.

உணவுக்கும் உடைக்கும் தோன்றிய தேடலே வாழ்வாகப் பரிணமித்திருக்க வேண்டும். இதுவே துன்பத்தையும் இன்பத்தையும் மாறி மாறித் துய்க்க வைக்கின்றது. இதிலிருந்து ஒரு படி மேலே போய் இன்பத்திலும் நிலையான இன்பத்தைத் தேடும் முயற்சி ஏற்படும்போதுதான் கடவுள் கொள்கை மேலோங்குகின்றது. எனவே மனித வாழ்வின் முதிர்ந்த அறிவு நிலை கடவுட்கொள்கையாகும். மலைத் தெய்வத்தைத் தம் முதற்கடவுளாகக் கொண்டவர்கள் என்ற வகையில் தமிழ்க்குடி அறிவுநிலையில் தொன்மை வாய்ந்தகுடி எனக்கூறமுடிகின்றது.

தொல்காப்பியமே இன்று கிடைக்கும் தமிழ்நூல்களுள் மிக மூத்தது. கி.மு. மூன்றாம் நூற்றாண்டிற்கு முன் எழுந்ததாகக் கருதப்படுவது. "சேயோன் மேய மைவரை உலகமும்" என்பது தொல்காப்பியர் கூற்று. இங்கு சேயோன் என முருகப் பெருமான் சிறப்பிக்கப்படுகின்றார். மைவரை உலகு என்பது மேகம் சூழ்ந்து மரங்களடர்ந்துள்ள பசுமையான மலை என்ற பொருளைத் தருகின்றது.

உலகம் ஆணும் பெண்ணுமாக அமைந்தபோதே காட்சியும் கவர்ச்சியும் புணர்ச்சியும் அகற்சியும் தோன்றிவிட்டதாக அறிஞர் குறிப்பிடுவர். இவற்றின் காரணமாகத் தோன்றியதே மணவாழ்வு. காட்சி முதிர்ந்து கவர்ச்சியாவதும் அதுவே புணர்ச்சியைத் தோற்றுவிப்பதும் அதன் முதிர்ச்சி பிரிவு எனப்படுகின்ற அகற்சியாவதும் இயற்கை. பிரிவு நிகழ்ந்தால் உடல் இளைப்பு ஏற்படுகின்றது. இதனைக் கண்ட தாய் ஒருத்தி தன் மகளுக்குப் பேயோ பிசாசோ தீண்டிவிட்டதென முருகனுக்குப் பூசை வைக்கும் பண்பாடு பண்டைத் தமிழ் நூல்களில் காட்டப்படுகின்றது. ஆக தமிழருடைய வாழ்க்கையின் உணர்வாக கலந்திருப்பது முருக வழிபாடு.

இலக்கணத்தில் முருக வழிபாடு இடம்பெறுவதற்கு முன்னர் இலக்கிய வாழ்வில் எவ்வளவு காலம் முருக வழிபாடு நிலைபெற்றிருந்திருக்கும் எனச் சிந்திக்கத் தோன்றுகின்றது. இலக்கியங்கண்டு அதற்கு இலக்கணம் இயம்புதல்தானே முறை. இலக்கிய வழக்கில் பல ஆண்டுகளாகப் போற்றப்பட்ட வழிபாடே இலக்கண நூலில் எடுத்தாளப்பட வாய்ப்பினைக் கொண்டிருக்கும். எனவே முருக வழிபாட்டின் தொன்மைக்குக் கால எல்லை காண முடியாது.

சங்க இலக்கியங்களில் முருகன் பற்றிய செய்திகள் அநேக இடங்களில் வருகின்றன. இன்று கிடைக்கும் சங்க நூல்களுள் தொன்மையானதாகப் பரிபாடலைக் கருதுவர். இதில் இருபத்திரண்டு பாடல்களே தற்போது அறியப்பட்டுள்ளன. இவற்றுள் எட்டு முருகன் பற்றியவை. முருகனுடைய பிறப்பு, வரலாறு, வெற்றிச் சிறப்பு, வழிபடுமுறை, படைவீடுகளுள் முதன்மையான பரங்குன்றின் சிறப்பு முதலியன பற்றிப் பரிபாடல் பேசுகின்றது.

11 ம் பக்கத் தொடர்ச்சி

## தமிழரின் தொன்மையை...

"உடலம் ஒலியலும் செய்யை மற்றாங்கே
படையும் பவழக் கொடிநிறங் கொள்ளும்
உருவும் உருவத்தீ யொத்தி முகனும்
விரிகதிர் முற்றா விரிசுடர் ஒத்தி"

என்பது பரிபாடலில் வரும் முருகனைப் பற்றிய அடிகளாகும்.

கலித்தொகை, அகநானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு, குறுந்தொகை, பதிற்றுப்பத்து என அமையும் சங்க நூல்கள் பலவற்றிலும் முருகன் பற்றிய செய்திகள் காணப் படுகின்றன.

முருகன் குறித்துத் தனித்துவமாகப் பேசப்படும் சங்க இலக்கியமாகத் திருமுரு காற்றுப்படை திகழ்கிறது.
கடைச் சங்கத்தின் தலைமைப் புலவராகக் கொள்ளப்படும் நக்கீரரால் பாடப்பட்டது இந்நூல். சைவத் திருமுறைகளுள் பதி னோராம் திருமுறையாகவும் இந்நூல் அடக்கப்பட்டுள்ளது.
முருகவழிபாட்டின் தொன்மைக்கு இந்நூல் சிறந்த சான்றுகளைத் தருகின்றது. குறிஞ்சி நிலம் மட்டுமன்றி நெய்தல் நிலமாகிய கடற்கரையிலும் முருகன் வழிபடப்பெற்றான். இதற்கு திருச்சீரலைவாய் என்ற திருச் செந்தூர் சான்று பகர்கின்றது. ஏனைய ஐந்து படைவீடுகளான திருப்பரங்குன்றம், திருவாவினன்குடி (பழனி), திருவேரகம் (சுவாமிமலை), குன்றுதோறாடல், பழமுதிர் சோலை என்பன மலைகளிலே அமைந் துள்ளன.
முருகன் கையில் வேலை உடையவன். தொடக்க காலத்தில் வெறும் வேலை மட்டும் வைத்து வழிபட்டிருக்கலாம். வேல் பழங்காலத்தில் விலங்குகளை வேட்டை யாடுவதற்குப் பயன்பட்ட ஆயுதம். நீளமான இரும்புத் தண்டின் நுனியில் இலை வடிவம் போன்ற ஒன்றை இணைத்து வேலை அமைத்தனர். தொடக்க காலத்தில் கல்லால் செய்த வேலும் இருந்துள்ளது.

ஆயதங்களில் வேலையும் வில்லையும் தொன்மையானவையாகக் குறிப்பிடுவர். இவற்றுள் வேல் முந்தியதென்பதும் வில் பிந்தியதென்பதும் வரலாற்று உண்மை. வில்லை ஆக்குவதற்கு நீளமான கம்பி, வளைப்பதற்குரிய நாண், அம்பு போன்ற



யௌதேயர் காலத்து நாணயத்தில் (கிமு 200) வேல், சேவலுடன் காணப்படும் கார்த்திகேயன்

மூன்று உறுப்புக்கள் தேவை. வேல் அவ்வாறானதல்ல. எனவே வேல் வணக்கம் முந்தியதாகின்றது. இதனூடாக வேலை வணங்கு வதையே வேலையாகக் கொண்ட தமிழ்க் குடியின் தொன்மை உணரப்படுகின்றது.

செவ்வேளாகிய முருகன் கையில் இருக்கின்ற வேல் வீரம் பொருந்திய கூர்மையுடையது. தேவர்களைச் சிறை மீட்டது. வலிமையுடையது. கடலிற் பாய்ந்து சூரனை வென்றது. வெற்றி யுடையது குன்றையும் துளைத்தது. அந்தவேலே துணையாக அமையும் என நம்பிக்கை யூட்டுகின்றார் நக்கீரர்.

"வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் - வாரி
குளித்த வேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை" என்கிறது திருமுருகாற்றுப்படை.

முருகன் வேற்படையை எறிந்தே தான் ஆற்றிய வீரச் செயல்களிற் பெரும்பாலானவற்றைப் புரிந்தான். அவன் கிரவுஞ்ச மலையைப் பொடிப் பொடியாக்கினான். முருகனது தீரக்கை வேலே அந்தக் காரியத்தைச் செய்தது. மாயையின் மகனாகிய சூரனையும் அவனுடன் சேர்ந்திருந்த அசுரரர்களையும் வலி குன்றும்படி போரிட்டதும் அந்தத் திருக்கைவேல்தான்.

சூரசங்காரம் நிகழ்ந்தது மிகப்பழைய காலம். அந்தப் பண்டைக் காலத்தில் வீரதீரச் செயல் களை ஆற்றிய வேல், தன்னுடைய ஆற்றலால் அமரர்களுக்கு வந்த இடர்களையெல்லாம் களைந்தது.
குன்றம் எறிந்ததுவும் குன்றப்போர் செய்ததுவும்
அன்றங்கு அமரர்இடர் தீர்த்ததுவும் .... வேல்
என்கிறது திருமுருகாற்றுப்படை.

இவை பழைய கதைகள். ஆனால் அந்த வேல் இன்றும் தன்னை நம்பும் பக்தர் களுக்கு பாதுகாப்பாக நின்று உதவு கின்றது என்கிறார் அருணகிரியார்.

தொடர்ச்சி 14ம் பக்கம்



# மகத்தான உறவு

மனைவியுடன் மகத்தானா உறவு நீடிப்பது எப்படி?
மிகவும் கஷ்டமான ஒரு கேள்விதான். மனைவியுடன் சுமுகமான உறவு எப்போதும் வேண்டுமென விரும்பினால், முதலில் அவரை உங்களுடைய மனைவி என்ற கண் ணோட் டத்தில் பார்ப்பதை நிறுத்துங்கள். அவரை இன்னொரு மனித உயிராகப் பாருங்கள்.

இப்படிப் பார்த்தால் பிறகு அங்கே எந்தப் பிரச்சனையும் இருக்காது. 'இவள் என் மனைவி' என்று நீங்கள் பார்க்கத் துவங்கும் கணத் திலேயே எங்கோ அவள் உங்களின் சொத்து என்றாகிவிடுகிறது. உங்களுக்குச் சொந்தமான சொத்து என்றவுடனேயே உங்களது அணு குமுறை முற்றிலும் வேறுவிதமாக ஆகி விடுகிறது.

ஒருவரை நீங்கள் உங்களுடைய உரிமைப் பொருளாகக் குறைத்துவிடும் கணத்திலேயே அவருடன் இணைந்து வாழ்வதில் உள்ள அழகு மறைந்துவிடுகிறது. வேறு யாரோ ஒருவருக்கு அவள் அற்புதமானவளாகத் தெரியலாம். ஆனால் உங்கள் கண்களுக்கு வேறுவிதமாகத்தான் தெரிவாள்.

அவளை உங்களுடைய உரிமையாகப் பார்க்கும் காரணத்தால் அவருடைய அற்புதத் தன்மை உங்களுக்குத் தெரிவதில்லை.

உண்மையில் யாரையும் நீங்கள் உரிமை கொண்டாட முடியாது.

உங்களுடைய மனைவியோ, உங்கள் கண வரோ, உங்கள் குழந்தையோ யாருமே உங் களுக்கு உரிமையானவர் கிடையாது.

அவர்கள் உங்கள் சொத்து கிடையாது. இந்த நிமிடத்தில் அவர்கள் உங்களோடு இணைந் திருப்பதைக் கொண்டாடி மகிழுங்கள்.

'இந்த உயிர் என்னோடு இருப்பதைத் தேர்வு செய்திருப்பது எவ்வளவு அற்புதமான விஷயம்' என்று நீங்கள் மனமார உணர்ந்தால் மட்டுமே கொண்டாடும் தன்மை உங்களுக்கு வரும்.

மாறாக, 'இவள் என் மனைவி. எப்படியும் எனக்கு உடமையானவள்தான். என்னிடம் மட்டுமே இருக்க வேண்டியவள்' என்று நீங்கள் நினைக்கும் அந்தக் கணத்திலேயே பாராட்டும், கொண்டாடுதலும் காணாமல் போய்விடும்.

இரண்டு உயிர்களுக்கிடையே பாராட்டும், கொண்டாட்டமும் காணாமல் போனபிறகு, அவர்களிடையே இருக்கக்கூடிய உறவுநிலை யில் என்னதான் அழகு இருந்துவிட முடியும்?

12 ம் பக்கத் தொடர்ச்சி தமிழரின் தொன்மையை..



மகாபலிபுரத்துக்கு அருகில் அமைந்துள்ள சாளுவன்குப்பத்தில் அகழ்ந்தெடுக்கப்பட்ட கல்லால் ஆன வேல். இது சங்க காலத்தைச் சேர்ந்தது.

துதிக்கும் அடியவர்க்கு ஒருவர் கெடுக்க இடர் நினைக்கின் அவர் குலத்தை முதல் அறக்களையும் எனக்கோர் துணை ஆகும்" என்பது அவரது பாடல். அடியார்களுக்கு வேல் துணையாக விளங்குவது

**"தனித்துவழி நடக்குமென திடத்துமொரு வலத்துமிரு புறத்துமரு கடுத்திரவு பகல்துணைய தாகும்"**

என்பதும் அருணகிரியார் வாக்கு.
வல்லவன் ஒருவனது கையில் எந்த ஆயதம் கைப்பட்டாலும் சிறப்படையும். படைக் கலத்தைக் காட்டிலும் அதை ஏந்து கின்றவர்களே விறலடையவர்களாக இருக்க வேண்டும்.

"வாளொடென் வன்கண்ணர் அல்லார்க்கு" என்று கேட்கிறார் திருவள்ளுவர். வீரனாகிய முருகன் கையில் இருப்பதனால் பெருமை பெற்ற வேலை நம்முன்னோர் வழிபடு கடவுளாகக் கொண்டனர் எனத் துணியலாம்.

வேல் வணக்கத்தின் தொன்மை தமிழ்க் குடியின் தொன்மையைச் சுட்டி நிற்கின்றது. இலங்கையில் கதிர்காமம், மண்டூர், நல்லூர், செல்வச்சந்நிதி என அமைந்த தொன்மைத் தலங்களில் எல்லாம் வேல் வணக்கமே நிலைபேறடைந்துள்ளது.

கதிர் காமத்தில் ஆரம் பத்தில் வேல் வணக்கம் இருந்ததாகச் சிலர் குறிப்பிடுவர்.

இவை வேல் வணக்கத்தை மேற்கொண்ட தமிழ்க்குடி, இலங்கை முழவதும் பரம்பியிருந் தமைக்குத் தக்க சான்றாகக் கொள்ளத்தக்கது. வேலை ஞான சக்தியாகக் கொள்ளும் திறம் இக் குடியின் அறிவுக் கூர்மையின் வெளிப் பாடாகும்.

அரசியல் நிலையிலும் சரி சமூக நிலையிலும் சரி தமிழரின் பரம்பலையும் தொன்மையையும் நிறுவுவதற்கு இலங்கையில் வேல் வழிபாடு பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவது பயனு டையதாக அமையும்

---




கணவரோ அல்லது மனைவியோ எந்தத் தன்மையுடன் இருக்கிறாரோ அவரை அந்தத் தன்மையுடனேயே புரிந்து கொண்டு மதிக்கவும், கொண்டாடவும் முடியவில்லையென்றால், பிறகு அருமையான உறவுமுறை அங்கே எப்படி யிருக்கும்? ஆனால் அதே நேரத்தில், அவரை இன்னொரு 'உயிராக' நீங்கள் உணர்ந்தால், அங்கே மிக அழகான உறவு மலரும்.

உங்களுடைய வாழ்க்கைக்குள் பங்கெடுக்க வந்த பெண்ணை, 'இதோ, இங்கே, இப்போது என்னருகில் இருப்பது இன்னொரு சக உயிர்' என்ற அளவில் வெறுமனே பாருங்கள்.

ஒவ்வொரு கணமும் இப்படிப் பார்க்கும்போது அங்கு கொண்டாட்டம் மட்டுமே இருக்க முடியும்.
அவளுக்கு வேறு வழியே கிடையாது என்கிற ஒரு சூழலை சமூக ரீதியாக நீங்கள் உருவாக்க முயற்சிக்கலாம்.

ஆனால் அவளுக்கும் சில வழிகள் இருக்கிறது. எதுவுமே செய்ய முடியாத நிலையில் சிலர் தன்னை மாய்த்துக் கொண்டாவது கணவனுக் கான உரிமைகளை மறுத்திருக்கிறார்கள், இல்லையா? எனவே தயவுசெய்து புரிந்து கொள்ளுங்கள்.
யாரோ ஒருவர் சமூக ரீதியாக உங்களோடு பிணைக்கப்பட்டிருந்தாலும் அவர் தன் விருப் பத்தின் பேரில்தான் உங்களோடு தொடர்ந்து இருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.
எனவே, அவரின் விருப்பத்திற்கு நன்றி கூறி அவரையும், அவரது அருகாமையையும் மகத்தானதாகக் கொண்டாடுங்கள். இப்படி உறவை மதிக்கவும், கொண்டாடவும் தெரிந் திருந்தால் அங்கே மேன்மையான உறவு மட்டுமே இருக்கமுடியும்.

**– சத்குரு**




எதிரே இருப்பது இன்னதுதான் என்று தெரியாதளவிற்கு மூடுபனி. தென்னிந்திய சிற்ப - ஓவிய - கலை வேலைப்பாடுகளுடன் அந்தக் கோவில் கட்டும்பணி நடந்து கொண்டிருந்தது. முருகன் கோவில். அமைதியான கிராமம். பாரிய கருங்கற் களைக் பொழிந்து, சிற்பிகள் சிலை வடித்துக் கொண்டிருந்தார்கள் . உழியின் ஒலிச்சத்தம் எங்கும் கேட்டபடி இருந்தது.

பொன்னுக்கிழவர் பொல்லை ஊன்றிக் கொண்டு ஊசலாடியபடியே போய்க் கொண் டிருக்கிறார். மூன்றுகாலப் பூசைகளில் ஏதாவது ஒன்றையாவது தவறவிடமாட்டார். பூசை முடித்து வீடு திரும்புகையில்தான் அவர், அந்தப் பெண்ணைக் கண்டு கொண்டார். யாரிடமும் எதுவும் பேசாமல் தனிமையில் இருந்த அவளின் கண்கள் இமை மூடி இருந்தன. மனதை ஒருமுகப் படுத்தி தியானத்தில் இருந்தாள் அந்தப் பெண்.
வயது இருபதுக்கு மேல் இருக்கலாம் என மதிப்பீடு செய்து கொண்டார். அம்மன் கோவில் விக்கிரகம் மாதிரி அழகாக இருந்தாள். கிழவர் அந்தப் பெண்ணை, தனது பேரனுக்குப் பொருத்தம் பார்த்துக் கொண்டார்.

எப்ப திருமணப் பேச்சு எடுத்தாலுமே தட்டிக் கழிக்கின்றானே!
ஒருவேளை மனதில் யாரையாவது விரும்பி வைத்திருக்கின்றானோ?

கிழவரின் மகள், பேரனுக்கு திருமணம் பேசி, போராடி இழைத்து விட்டாள். அவன் திருமணமே வேண்டாம் என்கின்றான்.

தீர்த்தக் கிணறுவரை சென்ற கிழவர், இன்னு மொரு முறை நின்று, திரும்பி நிதானமாக அந்தப் பெண்ணைப் பார்த்தார். கிழவர் முடிவு செய்து கொண்டார். பக்தி சிரத்தையுடைய பெண் வீட்டிற்கு வந்தால் வீடும் மங்களகரமாக இருக்கும்.

காலம் கனிந்தது. கிழவர் ஒருநாள் அந்தப் பெண்ணிடம் மெதுவாக பேச்சைத் தொடக்கினார்.

பிள்ளை என்ன செய்கின்றீர்?
தாத்தா...! நான் யூனிவர்சிற்றி சோதினை எடுத்திட்டு இருக்கிறன்... இனி மறுமொழி வரும்வரையும் லீவு.
கணீரென்ற அவளின் குரலில் மெய் மறந்தார் கிழவர்.
பிள்ளை... என்று இழுத்தார் கிழவர். அவர் ஏதோ கேட்க நினைக்கின்றார் என்பதை உணர்ந்த அவள்
என்னுடைய பெயர் ஸ்ரீநிதி. அப்பா ஸ்கூல் பிறின்சிபலா வேலை பார்க்கிறார் என்றாள்.

ஆகா நல்ல இடம். நல்ல இடம் என்று புளகாங்கிதம் அடைந்தார் கிழவர்.

ஐயர் மணியைக் கிலுக்கி மந்திரங்கள் சொன்னார்.

ஸ்ரீநிதி கண்களைத் திறந்து தரிசனம் பெற்றுக் கொண்டாள். மனதிற்குள் ஏதோ வேண்டிக் கொண்டாள். வரிசையில் நின்று திருநீறு, பிரசாதம் பெற்றுக் கொண்டாள்.
ஒருநாள் கிழவர் மயக்கத்தில் கோவில் வாசலில் விழுந்து விட்டார். அருகில் இருந்தவர்கள் அவரைத் தூக்கி கோவிலுக்குள் கிடத்தினார்கள். மயக்கம் தீரும் வரும்வரைக்கும் பனை ஓலை விசிறியால் காற்று வீசினாள் ஸ்ரீநிதி.

தாத்தா வெறுங்காலோடை நடக்காதீங்கோ...!
கல்லு முள்ளு எல்லாம் குத்திப்போடும்.

தாத்தா காலிற்கு செருப்பு போடுங்களேன்! என்று ஒரு சோடி செருப்பு வாங்கிக் கொடுத்தாள் ஸ்ரீநிதி.

**மண்ணில் நல்லவண்ணம்...**

ஒரே சந்தோஸத்தில் போய் சாய்வணைக் கதிரையில் பொன்னுக் கிழவர் சரிந்தார். சரிந்தவர் சரிந்தவர்தான்.
அப்புறம் எழும்பி நடக்க முடியாமல் முடங்கிப் போய்விட்டார். பாரிசவாதம் என்றார்கள் வைத்தியர்கள். கதைப் பதற்குக் கூடக் கஸ்டப்பட்டார்.
அதன்பின் கோவிலுக்குப் போகும் பாக்கியம் அவருக்குக் கிட்டவில்லை.
உள்ளத்தை கோவிலாக்கி மனவெளியில் பூஜை செய்தார்.

காலம் கடந்தது.

ஒருநாள் இரவு தகப்பனிற்கும் மகனிற்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. கிழவர் ஒரு கரையில் இருந்து எல்லாவற்றையும் அவதானித்துக் கொண்டிருந்தார்.

நீ திருமணம் செய்யாவிட்டால், உன் தங்கைகளை யோசித்துப் பார்..?
நீ யாரையோ விரும்பியிருக்கிறாய்... அது தான்... உள்ளுக்கொண்டு வைச்சுக் கொண்டு வெளியிலை ஒண்டு கதைக்கிறாய்! அப்பா கத்தினார்.

கடைசியில் மகன் திருமணம் செய்ய ஒத்துக் கொண்டான். கிழவர் விடிந்தபின் தன் எண்ணத்தைச் சொல்ல எண்ணியிருந்தார். ஸ்ரீநிதி மாத்திரம் இந்த வீட்டிற்கு வந்துவிட்டால் குடும்பத்தைக் கோவிலாக்கி விடுவாள்.

காலையில் பேரன் அன்றைய தினசரியை கிழவருக்குப் பக்கத்தில் வைத்துவிட்டுப் போனான்.

தம்பி ஒரு கதை... இல்லை இல்லை... நான் அம்மாவிடமே கதைக்கிறேனே! கிழவர் சொல்லி விட்டு நாளேட்டைப் புரட்டினார்.

-கந்தசுவாமி கோவிலுக்கு அனுபவம் மிக்க ஒரு சிற்பி உடனடியாகத் தேவைப்படு கின்றார். சம்பளம் நேரில் பேசி தீர்மானிக் கப்படும்.
திடீரென அந்த விளம்பரம் கிழவரின் கண்ணில் பட்டது. அது பூதாகாரமாகி எழுந்து கிழவரை விழுங்குவது போல் இருந்தது.



கோவிலில் இருந்த சிற்பிக்கு என்ன நடந்தது? அருமையான மனிதர்! ஏதாகிலும் சுகமில்லாமல் இருக்கலாம்.

கிழவரின் மனம் அதை அறியும் ஆவலில் உந்தியது.

பிள்ளை மலர்... பத்திரிகை பார்த்தியா?

கோயிலுக்கு சிற்பி தேவையாம் எண்டு போட்டிருக்கினம். என்னண்டு விளங்கேல்லை. நானும் கனநாளா கோயிலுக்குப் போகேல்லை. ஒருக்கால் தம்பி சைக்கிளிலை வருவனெண்டால் போயிட்டு வரலாம்.

எல்லாவற்றையும் விட் பேரனுடன் சைக்கிளில் போகும்போது மனதில் உள்ளதை வெளிப் படுத்தி விடலாம் என்பது அவர் எண்ணம்.

பத்து மணியளவில் போனால் பேரனுக்கு ஸ்ரீநிதியையும் காட்டி விடலாம்.



16ம் பக்கத் தொடர்ச்சி

**மண்ணில் நல்லவண்ணம்...**

கோவிலில் பூஜை நடைபெற்றுக் கொண்டிருந்தது. கோவில் வாசலில் பொன்னுக் கிழவரை சைக்கிளிலிருந்தும் இறக்கி விட்டான் பேரன்.

சங்கு, மணி ஒலிகள் முழங்க பூஜை நடைபெற்றுக் கொண்டிருந்தது. மந்திர உச்சாடனங்கள், தேவார பாராயணங்கள் அந்த ஒலிகளுடன் கலக்கின்றன. கிழவரின் மனம் அமைதியடையாமல் இருந்தது.

அருகே இருந்த ஒருவரிடம் மெதுவாகப் பேச்சுக் கொடுத்தார்.

-நான் உங்களிடம் ஒரு கேள்வி கேட்கலாமா?

அவர் கிழவரை நிமிர்ந்து பார்த்துவிட்டு தன் வேலையைத் தொடரலானார். பின்னாலே திரும்பிப் பார்க்கின்றார். ஸ்ரீநிதி வந்திருந்தால் அவளிடமாவது கேட்டுப் பார்க்கலாம். கிழவரின் கண்கள் அகல விரிந்தன. அங்கே அந்தப்பெண்ணைக் காணக் கிடைக்கவில்லை.

பரீட்சை முடிவுகள் வந்து, பல்கலைக் கழகம் தொடங்கியிருக்கலாம் என கிழவர் முடிவு செய்தார்.

பூஜை முடிந்து விட்டது. இன்னும் கொஞ்ச நேரத்தில் பாராயணம் தொடங்கி விடும். பொல்லை ஊன்றிக் கொண்டு சிற்ப வேலை செய்து கொண்டிருந்த வயது முதிர்ந்த சிற்பி ஒருவரிடம் சென்றார் கிழவர்.

வணக்கம். முன்பு இங்கே சீலை வடித்துக் கொண்டிருந்த சிற்பிக்கு என்ன நடந்தது? சிற்பி தேவை எண்டு பேப்பரிலை விளம்பரம் வந்திருந்தது! புதியவர் இருக்கையை விட்டு எழுந்து, வாயிற்குள் குதப்பிக் கொண்டிருந்த பாக்குச்சீவலை வேலிக் கரையோரமாகச் சென்று துப்பி விட்டு வந்தார்.

ஐயா பெரியவரே! மூன்று வாரங்களுக்கு முன்னர் பலமான புயல்காற்று வீசியது உங்களுக்கு நினைவிருக்கின்றதா?

ஆம்... தெரியும் என்றார் கதை கேட்கும் ஆவலில் கிழவர்.

அந்தப் புயல் காற்றில் செதுக்கி வைத்திருந்த சிற்பங்கள் ஒன்றோடு ஒன்று மோதி விழுந்து உடைந்துவிட்டன. அதைக் காப்பாற்றுவதற்காகக் போன சிற்பி, சிற்பங்களுக்கிடையே விழுந்து சிக்குப்பட்டுப் போனார். அவரின் கூக்குரல் கேட்டு, அவரைக் காப்பாற்றுவதற்காகப் போன ஸ்ரீநிதி என்ற பிள்ளைக்கும் காயங்கள். இரண்டு பேரும் வைத்தியசாலையில் இருந்தார்கள். நல்ல வேளை ஆபத்து ஒன்றும் இல்லை

சொல்லிக் கொண்டே போனார் அவர். தலைமேல் கையை வைத்த பொன்னுக்கிழவர் பொல்லு இடறுப்பட கற்குவியல்கள் மீது சரிந்தார்.

கிழவரைத் தூக்கி கோவில் விறாந்தயில் கிடத்தினார்கள். கிழவரின் நினைவு மெல்லத் திரும்புகின்றது. பேரனது மடிமீது தலையிருக்க, பேரனுக்குப் பக்கத்தில் ஒரு பெண் காற்று வீசிக் கொண்டிருக்கின்றாள்.

அவளின் முகத்தை ஏறிட்டுப் பார்த்த கிழவர், ஸ்ரீநிதி என்று முனகிக் கொண்டார்.



ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாள் ஆலயம்



தினசரி மாலை
6.00 மணிக்குப்
பூஜை உண்டு

Tel: 02304/ 16721

Robert koch Str.5
58239 Schwerte
Germany

Tel: 02304- 910 9445
0177 20 16 941

துர்க்கா பூஜா துரந்தரர்
சிவசாமிக்குருக்கள்
ஜெயந்திநாதக்குருக்கள்




சிவத்தமிழ் சிறக்க வாழ்த்துகிறோம்











## உரும்பிராயில் இடம்பெற்ற புதிய மணிமண்டபத் திறப்பு விழா

உரும்பிராய் கற்பகவிநாயகர் மணிமண்டபத் திறப்பு விழா இன்று 05.06.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சிறப்புற இடம்பெற்றது. உரும்பிராய் கற்பகவிநாயகர் ஆலயப் பரிபாலன சபையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு ஆலய பரிபாலன சபைத் தலைவர் வங்கியாளர் சி. நந்தகுமார் தலைமை தாங்கினார். மண்டப அமைப்புக்கு பாரிய உதவி நல்கிய லண்டனைச் சேர்ந்த கு. விவேகானந்தன் தம்பதியர் மண்டபத்தைத் திறந்து வைத்தனர்.

நிகழ்வின் அதிதிகளாக யாழ். மாவட்ட அரச அதிபர் நா. வேதநாதன், ஆளுநரின் செயலர் இ. இளங்கோவன், கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன், தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன், கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரை யாளர் ச.லலீசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நல்லை ஆதீனமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், கற்பக விநாயகர்

## அன்னதான மண்டபம்

ஆலயப் பிரதம குரு வண. தியாக கிருஷ்ணமூர்த்திக் குருக்கள், யாழ். சின்மயமிஷன் முதல்வர் வண. ஜாக்கிரத் சைதன்யர் ஆகியோர் ஆசியுரைகளை வழங்கினர்.

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய மாணவியரின் வரவேற்பு நடனம், கற்பக விநாயகர் ஆலயப் பொரு ளாளர் சி. சிவராம் வரவேற்புரையாற்றினார், செயலாளர் ப. சேயோன் நன்றியுரை ஆற்றினார்.


மண்டப அமைப்புப் பணிகளில் பங்கேற்ற கலைஞர்கள் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். சிறப்பு நிகழ்வாக பஞ்சமூர்த்தி குமரன் குழுவினரின் நாதஸ் வரக்கச்சேரி இடம்பெற்றது. கற்பக விநாயகர் ஆலய வடக்கு வீதியில் இம்மண்டபம் அமைக்கப் பட்டிருக் கின்றமை குறிப்பிடத்தக்கது. மணிமண்டபத்தின் ஒரு பகுதி அன்னதான மண்டபமாகவும் அமைந்தள்ளது சிறப்பானது.

“கோவில் இல்லா ஊரில் குடி இருக்கவேண்டாம்” என்ற ஆன்றோர் முதுமொழிக்கு ஏற்ப பணிகள் தொடர சிவத்தமிழ் வாழ்த்துகின்றது..

# மண்ணித் தலைச்சி சிவாலயம்

## யாழ்ப்பாணம் பூநகரியில் கண்டு பிடிக்கப்பட்ட மிகப் பழைமையான ஆலயம்!

**பேராசிரியர் புஷ்பரத்தினம் (மலர்ரத்தினம்)**



கட்டடக் கலை, சிற்பக்கலை தொடர்பாக ஆய்வுகளை மேற்கொள்வது வித்தியாசமான, சுவையான அனுபவத்தைக் கொடுக்கக் கூடியது. அந்த வகையில் இலங்கையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் புசுபரட்ணம் அவர்கள் கடந்த 15, 20 ஆண்டுகளாக தொடர்ச்சியாக ஆய்வு பணியில் ஈடுபட்டு வருகிறார். அவரது ஆய்வுகள் மூலம் பல மறைந்த உண்மைகள் வெளிக்கொணரப்பட்டுள்ளன.

நான் பல்கலைக்கழகத்தில் 1993 ஆம் ஆண்டு விரிவுரையாளராக சேர்ந்த காலப்பகுதியில் மண்ணித் தலை என்னும் இடத்திற்கு மாண வர்களுடன் சென்றிருந்தேன். அந்த இடம் மிகவும் அற்புதமான இடம் ஆகும். அப்படி ஒரு இடம் யாழ்ப்பாணத்தில் உள்ளதா? என பலரும் வியக்கக் கூடிய வகையில் அற்புத மான பிரதேசமாக அது விளங்குகிறது. என்னையும் மண்ணித் தலை எதோ ஒரு ஒரு வகையில் கவர்ந்த காரணத்தால், பூநகரி என்னும் இடம் என்னால் ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. பூநகரியில் வெட்டுக்காடு கௌதாரிமுனை மண்ணித்தலை என்பது சுமார் 12 கிலோ மீற்றர் நீளமான, மணற்பாங்கான பிரதேசம் ஆகும். இங்கு பெரும்பாலும் சம தரை நிலங்களை விட, மணல் மேடுகளே அதிகம் காணப்படுகின்றன.

அம்மணல் மேடுகள் கூட காலத்துக்கு காலம் மாற்ற மடைந்த வண்ணம் உள்ளன. மேடாக இருந்த மணல் மேடுகள் பள்ளமாகவும், பள்ளமாக இருந்த மணல் மேடுகள் மேடுகளாகவும் மாறும் இயல்பு அங்கு உண்டு. நாங்கள் அங்கு சென்ற சமயம் குறிப்பட்ட மண்ணித் தலைச் சிவாலயம் முழுமையான தோற்றத்துடன் காணப்பட வில்லை. கோயில் விமானத்தின் ஒரு பகுதியும், கோவில் சுவரின் ஒரு பகுதியும் மட்டுமே தென்பட்டது. அக்கோவிலை முதன் முதலாக நான் பார்த்தபோது, இது ஒரு பழைய கோவில் என்ற எண்ணத்துடன் திரும்பி விட்டேன். ஆனாலும் அந்த இடத்தின் நினைவுகள் என்னை ஏதோ ஒரு வகையில் ஈர்த்தன என்றால் அது மிகையாகாது. எனவே மீண்டும் அங்கு சென்று தொடர்ச்சியாக பல மாதங்கள் ஆராய்ச்சி மேற் கொண்டேன் என்று தெரிவித்தார்.

என்னுடன் இணைந்து செயற்பட்ட ஊர் மக்கள் மற்றும் பலரின் இடைவிடாத முயற்சியின் காரணமாகவும், எங்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு நடவடிக்கைகளினாலும் அக்கோவிலின் முழுமையான தோற்றம் வெளிவந்திருக்கிறது. இக்கோயில் அமைந்துள்ள பிரதேசமானது 12 கிலோமீற்றர் நீளத்தைக் கொண்டதுடன், சில இடங்களில் 3 கிலோ மீற்றர் அகலத்தையும், சில இடங்களில் வெறுமனே 1/2 கிலோ மீற்றர் அகலத்தையும் கொண்டுள்ளது. இப்பிர தேசத்தில் வாழ்பவர்கள் அனைவரும் சைவர்கள் ஆவார்கள்.

அங்கு மேலும் பேராசிரியர் கூறுகையில் 1993 ஆம் ஆண்டு என்னால் இச்சிவாலயம் முதன் முதலாக அடையாளம் காணப்பட்டது. ஆனாலும் கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக இப்பிரதேசத்தில் மேலும் ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதில் ஏற்பட்ட கால தாமதமும், யுத்தத்தின் பாதிப்பு களும் இச்சிவாலயத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

தற்போது இச்சிவாலயம் வெடிப்புகளும், இடிபாடுகளும் நிறைந்து தோன்றுவதுடன், முகப்புத் தோற்றம் இடிவடைந்த நிலையிலே காணப்படுகின்றது.

தொடர்ச்சி 27ம் பக்கம்.




செல்வன். ஷங்கர்ஷன் சர்மா . ஜெயந்திநாதக்குருக்கள் அவர்களுக்கு 66 வருட வரலாறு கொண்ட “வெற்றிமணி வளர்கலை விருது” கொடுத்துக் கௌரவித்தது.



## பணிவு பக்தி துணிவு அவதானிப்பு இவற்றை மிதமாகக்கொண்ட மிருதங்கக் கலைஞன் சங்கர்ஷன்!

சங்கர்ஷன்சர்மா ஜெயந்திநாதக்குருக்களின் மிருதங்க அரங்கேற்றம் (01.11.2015) யேர்மனியில் சுவற்றா நகரில் மிகச்சிறப்பாக இடம்பெற்றது. சங்கர்ஷன் சர்மா எசன் நுண்கலைக்கல்லூரி மிருதங்க ஆசிரியர் லயனஞானவாருதி அனுசாந்த் நயினை விஜயன் அவர்களின் மாணவனும்,சுவற்றா கனகதுர்க்க அம்பாள் ஆலய பிரதம குரு துர்க்கா பூஜா துரந்தரர் சிவஸ்ரீ ஜெயந்திநாதக்குருக்களின் மகனும் ஆவார்.
விழாவிற்கு சிவஸ்ரீ தெய்வேந்திரக்குருக்கள் ( டோட்மூண்ட் சிவன் கோவில் பிரதம குரு) தலைமை தாங்க பிரதமவிருந்தினராக சிவஸ்ரீ சோமஸ்கந்த சிவாச்சாரியர் ( முன்னாள் யாழ் பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர்) அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக கம் காமாட்சி அம்பாள் ஆலய பிரதம குரு பக்கவத்திருமணி சிவஸ்ரீ பாஸ்கரக்குரக்கள் அவர்களும்,சுவற்றா நகர் நகரபிதா Heinrich Böckelür அவர்களும் சுவற்றா தமிழாலய நிர்வாகி திரு.கோபிநாத்த மற்றும் வெற்றிமணி பிரத ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர். வரவேற்புரை பிரம்மஸ்ரீ சிவதர்சன் ஜெயந்திநாதக் குருக்கள் நிகழ்த்தினார்.

நடராஜர் பூசை. சிவஸ்ரீ பிரணவக்குருக்கள் சோமாஸ்கந்தக்குருக்கள் நிகழ்த்த அரங்கமே தெய்வீக மணம்கமள குருவும், மாணவனும் ஏன் சபையோரும் கண்களில் ஒருவித நெகிழ்ச்சி பொங்க நின்றது அங்கு தெரிந்தது. அதனைத் தொடர்ந்து தமிழ்வேள் நயினை விஜயன் அவர்களும் அவரது புதல்வி ஜனனி சிவதாஸ் அவர்களும் சிறப்பாக தொகுத்து வழங்கினர். சங்கர்ஷன் சர்மா அவர்களின் மிருதங்க அரங்கேற்றத்திற்கு பக்கவாத்தியக் கலைஞர்களாக, தமிழகத்தைசேர்ந்த பிரபல பாடகர் இசைப் பேரொளி ச. சாகேத்தராமன் அவர்கள் பாட, மிருதங்க அரங்கேற்றம் காணும் சங்கர்ஷன் சர்மா அரங்கேற்றம் போல் அன்றி ஒரு மாபெரும் கச்சேரிக்கு வாசிக்கும் திறனோடு வாசிக்க, தம்புராவை ஜனாத்தனி சுபசபாநாதசர்மா மீட்ட, கடம் மிருதங்க கலாஜோதி நகுஷாந் நயினைவிஜயன் வாசிக்க நடிகமணி வி.வி.வைரமுத்து அவர்களின் பேரன் பிரவீன் சாரங்கன் வயலின்வாசிக்க கலஜோதி அனுசாந் நயினைவிஜயன் அவர்களின் முதல் அரங்கேற்றம் கண்ட மாணவன் ராகுலன் ராமநாதன் கஞ்சிரா வாசிக்க, செல்வன் வாரணன் சுரேஷ்குமார் மோசிங்வாசிக்க, அரங்கேற்றம் இளைஞர் அணியோடு களம் இறங்கியது.

தொடர்ச்சி 22ம் பக்கம்



T.T.S.Brothers GmbH&Co.KG

உங்கள் வீட்டு தேவைக்கான அனைத்து மளிகை பொருட்கள்
ஆடை அணிகலன்கள் மற்றும்
உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்புவது முதல் அனைத்து
தேவைகளுக்கும்
நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288

Helmholtz Str.11
46045 Oberhausen
Tel:0208 202829

Garten Str.29
48147 Münster
Tel: 0251 2301184

Johannes Str.35
53225 Bonn Beuel
Tel. 0228 40377846

சிவத்தமிழ் சிறக்க வாழ்த்துகிறோம்

# விரதமும் விஞ்ஞானமும்

ஆன்மிகத்தென்றல் த.புவனேந்திரன்.



விரதம் இருப்பது மூடநம்பிக்கை என்பது இல்லை. அது மத நம்பிக்கை என கருத்துக்கள் இருக்கின்றன. ஆனால் உண்மையில் விரதத்திற்குப் பின்னால் மிகப் பெரிய விஞ்ஞானம் இருக்கிறது. அது என்ன விஞ்ஞானம்?

**விரதம் இருப்பது எதற்கு?**

அன்னத்தை அடக்கியவன் ஐந்தையும் அடக்குவான் என்பார்கள் ( அந்த ஐந்தும். கண், காது, மூக்கு, வாய், உடல்) இவற்றைக் கட்டுப்படுத்தும்போது எங்கள் மனம் ஞானத்தைத்தேடிச் செல்கிறது என்பதை அத்தனை தத்துவ ஞானிகளும் ஒப்புக் கொண்டுள்ளார்கள். வாயைக் கட்டுப் படுத்த முடியாமல் கண்ணில் தெரிவதை எல்லாம் சாப்பிட்டு பல உபாதை களுக்கு பிறகு டயட் (Diet) செய்வது வழக்கமாகி விட்டது. மக்களின் மனங்களை அறிந்து கொண்ட வியாபார மருத்துவ உலகம் டயட்டுக்கு மருத்துகளை உருவாக்குகிறது.
இதைச் சாப்பிடவும், இதை தவிர்க்கவும், இந்த உணவை அழவாகச் சாப்பிட்டால் நல்லது என்றும், நாம் எப்போது எந்த அழவில் சாப்பிடவேண்டும் என்றும் அவர்கள் கட்டுப்பாடு வைக்கிறார்கள். முன்பு பெரியவர்கள் சொல்வதைக் கேட்டு பின்பற்றி வந்திருந்தால் நாங்கள் இன்று வைத்தியர் களை தேடிப்போகத் தேவையில்லை.

நமது வயிறு 15 நாட்களுக்கு ஒருதரமாவது வெறுமையாக இருக்க வேண்டும்.
இதனால்தான் அமாவாசை, பௌர்ணமி என விரதங்கள் வரையறுக் கப்பட்டிருந்தன. விரதம் இருப்பதால் வயிறு சுத்தமாகிறது ஜீரண உறுப்புக்கள் சீராகிறது என்பதை சித்த மருத்துவர்கள் கூறு கிறார்கள். இந்த வகை யில்தான் எல்லா மதங்களும் விரதத்தை முக்கியமாக அனுசரிக்கக் கூறுகிறார்கள்.
சபரிமலை ஐய்யப்பனுக்கு மாலைபோட்டு ஒரு மண்டலம் (48 நாட்கள் ஒரு மண்டலம்) விரதம் இருந்து சபரிமலைக்கு போய்வருகிறார்கள் பக்தர்கள். இதேபோல் தாய் நாட்டிலும் நல்லூர் கந்தன், கதிர்காமம் இப்படி பல ஆலயங்களுக்கும் பலர் விரதம் இருக்கிறார்கள்.
வயிறு சுத்தமாகிறது. உடல் நலம் பெறுகின்றது. உபாதைகள் குறைகின்றது.
இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு உயிர்நீத்து, உயிர்த்தெழுந்த நாள் ஈஸ்டர் திரு நாளாகக் கொண்டாடப்படுகிறது. இந்தப் தினத்திற்கு முன் கிறிஸ்தவர்கள் 40 நாட்கள் விரதம் இருப்பார்கள்.
இதைத் தவக்காலம் என்பார்கள்
ரம்ளான் காலத்தில் முஸ்லிம்கள் முப்பது நாட்கள் நோன்பிருக்கிறார்கள். இந்தக்காலத்தில் ஒழுக்கம், தர்மம் என்ற கோட்பாடுகளையும் அவர்கள் கடைப்பிடிக்கிறாகள். வருடத்தின் ஆரம்ப காலங்களில் பாபிலோனியர்களும், எகிப்தியர்களும், கிரேக்கர்களும் நாற்பது நாட்கள் உபவாசம் இருப்பது வழமையாக இருந்து வருகின்றது.

மொத்தத்தில் சகல மதங்களும் விரதத்தை உடலையும், மனதையும் செம்மைப்படுத்தும் விடய மாகவே வழிநடத்தி வருவதை அறியக் கூடியதாக இருக்கிறது. மதங்கள் யாவும் எல்லாருக்கும் எல்லாமும் சென்றடைய வேண்டும் என்றும், இல்லாதவர்களுக்கு இருப்பவர்கள் கொடுப்பதும் என்றும் பொதுநலத்தையும் போதித்து வருகிறது.

இன்னொரு முக்கியமான விடயம் நாற்பத்தெட்டு நாட்கள் அதாவது ஒருமண்டல காலத்திற்கு தொடர்ந்து செய்யும் போது இயல்பாகவே அதற்கு நம் மனமும், உடலும் பழக்கமாகி விடுகின்றன. உடல்நலம், மனநலம், பொதுநலம் கலந்த விரதங்களை அதன் பழமையான கதைகளை கேட்டு அறியாமல் விட்டுவிடாமல், விரதங்களின் காரணங்களை அறிந்து அதனுடன் இருக்கும் விஞ்ஞானத்தையும் புரிந்து பின்பற்றினால், இந்த உலகமே வியக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

20ம் பக்கத் தொடர்ச்சி



படங்கள் : கோணேஸ் செந்தில்

மேடையில் வீற்றிருந்த கலைஞர்கள் அத்தனை பேரும் முப்பது முப்திமூன்றைத் தாண்டாத இளம் முத்துக்கள். இங்கு உள்ள பெற்றோர்கள் பெருமிதம் கொள்வேண்டும். ஒரு மாண வனுக்கு குருவும், குருவிற்கு மாணவனும் சிறப்பாக அமைவதென்பது பூர்வ புண்ணிய மாகும்.

இங்கு அந்தப் புணியத்தின் பயன் அரங் கேற்றத்தில் தெரிந்தது. சங்கர்ஷன் சர்மாவின் விரல்களுக்குள் மிருதங்கத்தின் ஒலி துல்லிய மாக விளையாடியதை அவதானிக்க முடிந்தது. பணிவு ஆர்வம் குருபக்தி இவை சங்கர்ஷன் சர்மா சிறந்த அணிகலங்கள். குருவான அனுசாந்த் அவர்களிடம் இளம் வயதாக இருந்தாலும், ஒரு முதுபெரும் கலைஞனுக் குரிய பரிவு பாசம் அக்கறை இவற்றை தனது மாணவன் மீது காட்டியதை மேடையில் பல நேரங்களில் அவதானிக்க முடிந்தது.

வெற்றிமணி பத்திரிகை சங்கர்ஷன்சர்மா அவர் களுக்கு 66 வருட வரலாறு கொண்ட வெற்றிமணி வளர்கலை விருது கொடுத்துக் கௌர வித்தது. அரங்கேற்ற நாயகன் சங்கர்ஷன் சர்மா கலை வாழ்வில் சிறக்க பல ஆலயங்களின் நிர்வாகசபை யினரும் உலகக்கோவில் இணையத்தளம் இன்னும், பல கலை நிறுவனங்களும் கௌரவம் செய்து மகிழ்ந்தனர்.



## யேர்மனி சுவற்றா ஸ்ரீ கனக துர்க்கா அம்பாள் ஆலயத்தில் யேர்மன் மொழியில் ஆலய விபரக் கையேடு வெளியீடு

கடந்த 20.08.2015 யேர்மனியில் சுவற்றா நகரில் அமைந்துள்ள ஸ்ரீ கனக துர்க்கா அம்பாள் ஆலயத்தில் யேர்மன் மொழியில் எழுதப்பட்ட ஆலய விபரக் கையேடு (Temple Informationsbroschüre) ஒன்று வெளியடப்பட்டது. இதனை செல்வி வைஷ்ணவி ஜெகன்மோகன் அவர்கள் யேமன்மொழியில் எழுதியிருந்தார். இக்கையேடு வெற்றிமணி நிறுவனத்தினரால் வெயிடப்பட்டது. இக்கையேடு யேர்மன் மக்களுக்கு ஆலயம் பற்றிய விபரத்தை தருவதாக அமைந்தள்ளது. இளவயதில் இப்படி ஒரு கைநூலை யேர்மன் மொழியில் இயல்பாக எழுதிய செல்வி வைஷ்ணவி ஜெகன்மோன் அவர்களை வாழ்த்துவோம்.


டோட்முணட் நகரில்
மாபெரும் ராஜ முத்திரை!

S.K.Silks & Gold Paraadise



என்றும் புதியது
அழகின் இரகசியம் அது

பட்டுச் சேலைகளுக்கும் தங்க நகைகளுக்கும் நாடுங்கள்...

Mr.P.Sritharan
Proprietor

Tel:0231 9501 647

Adler str 33 - 44137 Dortmund

சிவத்தமிழ் சிறக்க வாழ்த்துகிறோம்

# அன்பு என்பது தெய்வமானது!

**"இலக்கியச் செம்மல்" இந்துமகேஷ்**



நாம் அன்பு காட்டுபவர்கள், நம்மீது அன்பு காட்டுபவர்கள என்று இருவகை அன்பால் இயங்குகிறது வாழ்க்கை!
நம்மீது அன்புகாட்டுபவர்கள் அனைவர்மீதும் நாம் அன்புகாட்டுகிறோமா என்றால் இல்லை என்பதுதான் விடையாக இருக்கிறது. அதுபோலவே நாம் அன்புசெய்கிறவர்கள் எல்லோருமே நம்மீது அன்புகாட்டுகிறார்களா என்னால் அதுவும் இல்லை என்பதே விடையாக இருக்கும்.
அன்பு என்பது இயற்கை உணர்வு.
அது ஒவ்வொருவரிடத்தும் இயற்கையாகவே உறைந்து கிடக்கிறது. நாம் ஒருவர்மீது அன்பு செய்யலாம் அல்லது பிறர் நம்மீது அன்பு காட்டலாம். இது இயற்கையாக நிகழவேண்டும். ஆனால் நாம் அன்பு செய்கி றோம் என்பதோ நாம் அன்பு செய்யப்படு கிறோம் என்பதோ நம்மால் அறியப் படாததாக இருக்கவேண்டும். அப்போதுதான் அது முழுமையானதாக இருக்க முடியும்.

அன்பு புனிதமானது பூரணத்துவமானது.
அதை முழுமையாக வெளிக்காட்டுவதென்பது இயலாதது. அன்பின் வெளிப்பாடான காரி யங்கள்தாம் வாழ்வை முழுமைப்படுத்து கின்றன எனபது உண்மைதான்.
இது அன்பின் விளைவானது என்று அறியப் படாத வரைக்கும் தான் அந்தக் காரியங்களுக் கும் மதிப்பிருக்க முடியும்.

இது அன்பின் விளைவு என்று அறியப்படும் போது எதிர்பார்ப்புக்களும் உருவாகிவிடு கின்றன. எதிர்பார்ப்புக்கள் முழுமையுறாதபோது அன்பும் அர்த்தமற்றதாகத் தோன்றுகிறது.

இவன்மீது - இவள்மீது- இத்தனை அன்பு வைத்திருந்தேனே.. ஆனால் இவ்வளவும்தானா இவன் - இவள்? என்ற வினா அன்பின் அளவு கோல் அல்ல. அது எதிர்பார்ப்புக்களின் அளவுகோல்.
இதையே அன்பின் அளவுகோலாய் பற்றிக் கொள்ளும்போது அன்பு என்பதும் அர்த் தமிழந்ததாகிவிடுகிறது.
நம்மைப் படைத்துக் காத்து அழித்து மறைத்து அருளும் சக்தி என்பதே இறைவன் என்று கொண்டாடுகிறோம் நாம். கண்டறியாத இறைவன் மீது பற்றுக்கொள்கிறோம். பக்தி செய்கிறோம். நமக்கு உள்ளேயும் வெளியேயும் அவன் உறைந்திருக்கின்றான் என்ற உறுதி யான நம்பிக்கையோடு அவனை வடிவமைக் கிறோம் வழிபடுகிறோம்.

முக்திநெறி அறியாத மூடரெனத் தெரி பவர்களை ஒதுக்கி வைத்துவிட்டு, பக்தியால் நாம் அவனைப் பலகாலும் பற்றியே திருப் புகழ்பாடி முக்தனாய் மாறிட முயல் கின்றோம்.

பக்திவழி செல்கிறோம் என்பது சரி. ஆனால் நாம் பக்திசெய்கிறோம் என்பது நமக்குத் தெரியக்கூடாது. அவ்வாறு தெரிந்து கொண்டு விட்டால் அது பக்தியும் அல்ல.
நான் எவ்வளவு அன்புசெய்கிறேன். ஆனால் கண்கெட்ட கடவுள் என்மீது கருணை காட்ட வில்லையே! என்று இறைவனுக்கே சாபம் கொடுக்கும் நிலைக்கு ஒருவர் வருகிறார் என்றால் அவரது அன்பு முழுமையானது அல்ல என்பதே அர்த்தம்.

எது எது எப்போது நிகழவேண்டுமோ அது அது அப்போது நிகழும்.
என்பது இயற்கை விதி. இது ஏற்கனவே இயற்கையின்மூலம் இறைவன்
எழுதிவிவைத்த விதி.
இதை எவராலும் மாற்றுவதற்கு இயலாது.
விதி என்று எதுவுமில்லை என்பவர்களும் இந்த விதிக்குள் அடக்கம். என்பதே விதி.

அன்பே சிவம் என்று அவனையே பற்றி நின்றேனே என்விதி இப்படி ஆயிற்றே என்ற எவரும் புலம்பத் தேவையில்லை.
அன்பும் சிவமும் இரண்டல்ல என்பதும் அன்பே சிவமாய் அடங்கியிருத்தலும் இயல்பானது இயற்கை யானது.
அன்பு என்பதே தெய்வமானது என்ற உண்மை யை உணர்ந்துவிட்டால் போதுமானது.

நாம் அன்புக்காக ஏங்கவேண்டியதில்லை. நாம் அன்பு செய்கிறோம் என்று மயங்க வேண்டியது மில்லை.



## இயற்கை காட்டிய

# திருநீலகண்டர்

கௌசி சிவபாலன்

மதங்களிலே பழமையானது இந்துமதம் என்பது யாவரும் அறிந்ததே. சைவம், வைணவம், சாக்தம், சௌமாரம், காணாபத்யம் என்பன இந்துமதத்தினுள் அடங்குகின்றன. சிவபெருமானை முழுமுதற்கடவுளாகக் கொண்ட சமயம் சைவசமயம் ஆகும். இச்சிவபெருமான் திருநீலகண்டர் எனவும் சைவசமயத்தவர்களினால் அழைக்கப்படுகின்றார். திருநீலகண்டர் என்னும் நாமத்தினால் சிவபெருமானை அழைத்ததன் உண்மைக் காரணம் என்ன என்பதைப் புராணக்கதை எடுத்துரைக்கின்றது. உலகத்திற்கு உண்மை ஞானத்தை முதலில் எடுத்தியம்பிய சைவசமயத்தின் ஆன்மீகக் கதைகளின் மெய்ப்பொருள் அறியாது, கதையை மட்டும் உள்வாங்கிக் கருத்தை மட்டும் விட்டுவிட்டதனால், கதை நின்று நிலைக்கின்றது. இயற்கை மறைபொருளாக மறைந்து கிடக்கின்றது.

புராணக்கதை திருநீலகண்டர் என்னும் நாமத்திற்குக் கொடுக்கும் விளக்கமாவது, தேவர்களும் அசுரர்களும் நீண்ட காலம் வாழவேண்டும் என்று சிவனாரிடம் வேண்டிக் கொண்டனர். அப்போது சிவபெருமானும் பாற்கடலைக் கடைந்து, அதனுள் இருக்கும் அமுதத்தை அருந்தினால், நீண்டகாலம் உயிர்வாழலாம் என்று எடுத்துரைத்தார். அப்போது தேவர்களும் அசுரர்களும் இணைந்து மேருமலையை மத்தாகவும் வாசுகி என்ற பாம்பைக் கயிறாகவும் கொண்டு பாற்கடலைக் கடைந்தார்கள்.

அப்போது விஷம் பிரிந்து வெளியேறியது. அவ்விஷத்தை சிவபெருமான் எடுத்து உண்டதாகவும் அவ்விஷமானது சிவபெருமானைக் கொன்றுவிடும் என்று எண்ணிய உமையம்மையார், உடனே சிவபெருமானுடைய கழுத்தைப் பிடித்ததாகவும், அதனால் அவ்விஷமானது சிவபெருமானுடைய கண்டத்தில் தங்கிவிட்டதாகவும் இதனாலேயே சிவனுக்குத் திருநீலகண்டர் என்ற ஒரு பெயர் நிலவுவதாகவும் புராணக்கதை புனையப்பட்டது. அத்துடன் அசுரர்கள் அமுதத்தை உண்டால் நீண்டகாலம் உயிர்வாழ்ந்துவிடுவார்கள். அதனால், உலகுக்குத் தீங்கு ஏற்படுமே என்று கருதிய கிருஷ்ணபரமாத்மாவும் அழகான பெண் வடிவம் தாங்கி அங்கு தோன்ற அசுரர்கள் கவனமெல்லாம் அப்பெண்வடிவில் இலயிக்க, மறுபுறம் சிவபெருமானும் தேவர்களுக்கு அமுதம் முழுவதையும் கொடுத்து முடித்துவிட்டதாகவும் அக்கதை கூறுகின்றது. இதுவே புராணக்கதை கூறும் விளக்கமாகப்படுகின்றது.

ஆனால், அற்புதமான அண்டவெளி இரகசியத்தை சுவையான கதையாக இந்து மதம் கூறியிருக்கின்றது என்றால் அதிவிவேகமுள்ள மக்கள் அக்காலத்தில் வாழ்ந்து மடிந்திருக்கின்றார்கள் என்ற உண்மை புலனாகின்றது. ஆனால் இந்த அண்டவெளி இரகசியத்தின் உண்மை விளக்கத்தை எடுத்துரைக்காது சமயத்தோடு எடுத்துரைத்த காரணத்தினால், விளக்கம் மறைந்து போக கதை நின்று நிலைக்கிறது. இப்போது விளக்கத்திற்குள் வருகின்றேன். பாற்கடல் என்றால், என்ன?

**24ம் பக்கத் தொடர்ச்சி**

பால் போன்றிருக்கும் கடலல்லவா! அதுவே ஆங்கிலத்தில் Milkway என்றும் ஜேர்மனிய மொழியில் Milch straße என்றும் அழைக்கப்படும் அண்டவெளியாகும். தூரத்தில் நின்று பார்க்கும் போது பால் போன்று வெண்மையாகவே காட்சியளிக்குமாம். அதனாலேயே எம்மவரும் பாற்கடல் என்றழைத்தார்கள்.

மேருமலை என்னவென்று அறிய ஆவல் மேன்படுகிறதல்லவா! அதுவே எம்மையெல்லாம் காக்கின்ற கதிரவன். கதிரவனை பக்கமாக நின்று பார்த்தால், மேல் நோக்கி எரியும் மலையாகத்தான் காட்சியளிக்கும். உச்சியில் நின்று பார்த்தால், புள்ளியாகவே, அதாவது எமக்குத் தெரிவது போன்றே காட்சியளிக்கும். மேரு என்பது பொன். மேருமலையெனில் பொன்மலை என்பது புலப்படுகின்றது. எனவே பொன்மலை என்பது எம்மைக் காக்கும் சூரியன் என்னும் உண்மை மிக இலகுவாகப் புரிகிறதல்லவா

அவ்வாறெனில் வாசுகி என்னும் பாம்பு! அதுவே சூரியனைச் சுற்றி வலம் வருகின்ற அந்த 9 கிரகங்களும் ஆகும். கிரகங்கள் ஒன்பதும் தலையாகவும் அவற்றின் நிழல் வால் போன்றும் தூர நின்று பார்ப்பவர்களுக்குத் தோன்றமளிக்குமாம். இதனாலேயே மேருமலையைச் சுற்றிவருகின்ற வாசுகி என்ற பாம்பாக 9 கிரகங்களையும் எடுத்துரைத்தனர்.

சூரியக் கதிர்களிலிருந்தும் வலம் வருகின்ற கிரகங்களிலிருந்தும் தோன்றுகின்ற நச்சுவாயுவானது அண்டவெளியிலே கலந்திருக்கின்றது. இது உயிரினங்கள் தோன்ற முடியாத நச்சு நிலையாகும். அது சுழன்று பூமிக்கு வருகின்றது. உலகெங்கும் பரந்திருக்கும் இந்த நச்சுவாயுவினால், உலகமக்கள் அனைவருக்கும் பாதிப்பே. அது எந்த வடிவில் என்று கூறமுடியாது. ஆனால், அழிவு நிச்சயமாகிறது. அந்த அழிவைத் தருகின்ற நஞ்சை கண்டத்தில் தாங்கியவராக சிவபெருமான் உருவகிக்கப்பட்டார். நஞ்சை விழுங்கவும் முடியாது துப்பவும் முடியாது. இரண்டும் ஆபத்தே. ஆனால் உலகெங்கும் நஞ்சு இருப்பது நிச்சயம். அவரவர் உடல்நிலைக்கேற்ப நாம் நஞ்சற்ற காற்றைச் சுவாசித்து வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எனவே கண்டத்தில் நஞ்சை அடக்கிய சிவனும் அறிவின் படைப்பே.

இப்பிரபஞ்சமே சிவனின் வடிவம். அவர் கழுத்தில் தங்கிய விஷமே இப்பிரபஞ்சத்தில் தங்கியுள்ள விஷமாகும். ஒரு உடலில் கழுத்துப்பகுதியில் விஷம் தங்கினால், அவ்விஷத்தை விழுங்கவும் முடியாது, துப்பவும் முடியாது. துப்பினால் பிறருக்குக் கேடு. விழுங்கினால், விழுங்கியவருக்குக் கேடு. இதனாலேயே திருநீலகண்டர் வடிவில் கழுத்தில்(கண்டம்) விஷம் தங்கியதாக கதை புனையப்பட்டுள்ளது.

இங்கு அசுர தேவர்களை தோற்றம் தான் யாது! என்ற ஆராய்ச்சியில் இறங்கினால், சுரம் அசுரம் என்னும் இரண்டு பதங்களையும் எடுத்து நோக்கினால், சுரம் என்றால் தேவர்கள் அசுரம் என்றால், அசுரர்கள். இதன் விளக்கம் தான் யாது! நியூட்டனின் விதி தரும் விளக்கமே இதன் விளக்கமாகும். எந்த ஒரு செயலுக்கும் எதிர்ச்செயல் இருக்கும் என்பதாகும். தீமை இருந்தால், நன்மை இருக்கும். மகிழ்ச்சி இருந்தால், துன்பம் இருக்கும். எனவே தேவர்கள் இருந்தால் அசுரர்கள் இருக்க வேண்டும் அல்லவா! உலகில் இந்த இரண்டுவகை மனிதர்கள் வாழுகின்றார்கள். அவர்களே இந்த அசுர தேவர்கள் ஆவார்கள்.
எனவே அண்ட வெளியிலுள்ள சூரியனை நவக்கிரகங்கள் சுற்றிக் கொண்டிருக்கின்றன. இதனையே மேரு மலையை வாசுகி பாம்பு சுற்றிக் கொண்டிருப்பதாகவும், இப்பிரபஞ்சம் நச்சுத் தன்மையைக் கொண்டுள்ளது. அது பல காரணிகளால் கீழே வர விடாது தடுக்கப்படுகின்றது. இதனையே இப்பிரபஞ்சமாகிய சிவபெருமான் கண்டத்தில் தாங்கினார் என்று புராணக் கதைகள் எடுத்தியம்புகின்றன.

எனவே அழகான அற்புதமான இயற்கை நிகழ்வுகள், உட்பொருள் அறியாதமையால் பகுத்தறிவு அழிந்தது. திருநீலகண்டர் வடிவம் மட்டும் தெய்வமானது. இயற்கை நிகழ்வு தெரியாமல் போனது. எமது சமயத்தில் உள்ள உண்மைகளை உணர பொருள் உணர்ந்து படிப்போம்.



உரும்பிராய்
அருள்மிகு கற்பக விநாயகர்
மணிமண்டபம்
கலை கலாச்சார
நிகழ்வுகளுக்கும்
மற்றும்
சகல மங்கள நிகழ்வுக்களுக்குமான
அனைத்து வசதிகளுடன் கூடிய மண்டபம்
(குளிரூட்டப்பட்டது)
Tel:0094/ 21 221 1228

19 ம் பக்கத் தொடர்ச்சி **மண்ணித் தலைச்சி சிவாலயம்**



இவ்வாலயம் கிட்டத்தட்ட 24 அடி நீளமும், 12 அடி அகலமும் கொண்டது. ஆனாலும் இப்போது 3 அடி நீளமான சுவர்ப் பகுதி மாத்திரமே எஞ்சியுள்ளது.
இக்கோவில் கட்டடமானது கடலில் இருந்து எடுக்கப்பட்ட கோறைக் கற்களையும், செங் கட்டிகளையும், சுதை, சுண்ணாம்பு போன்ற வற்றையும் பயன்படுத்தி உருவாக் கப்பட் டுள்ளமை குறிப்பிடத் தக்கது.
இதனால் இக்கோவில் மிகப் பழைமையான கோவில் என்னும் முடிவுக்கு வரமுடியும். இவ்வாலயம் முழுமை யான திராவிட கலை மரபைக் கொண்டு விளங்குவதுடன் அத்திரா விடக் கலையை பிரதிபலிக்கின்ற மிகப் பழைமையான கோவில் இது என்பதில் அறிஞர்கள் மத்தியில் எவ்வித முரண்பாடு களும் காணப்படவில்லை.

ஆனால் கோவில் உருவாக்கப்பட்ட ஆண்டு தொடர்பாக அறிஞர்கள் பலரும் பல்வேறுபட்ட கருத்துக் களை முன் வைத்தாலும், அவர்கள் அனைவரும் திராவிட கலை மரபைக் பிரதிபலிக்கின்ற கோவில் இது என்பதில் மாற்றுக் கருத்தைக் கொண்டிருக்கவில்லை. இக்கோவில் கட்டடத்தில் உள்ள தூண் கிட்டத்தட்ட ஏழு அடி நீளம் கொண்டது. அங்குள்ள சுவர் ஆரம்ப கால சோழர் கலை மரபை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது.

மேலும் இக்கோவில் மாடமானது ஆரம்ப கால பல்லவ, சோழ, பாண்டிய காலத்தை பிரதிபலிக் கின்றன. மிக முக்கிய அம்சமாக மூன்று அடுக்குகளைக் கொண்ட வகையில் இக் கோவில் விமானம் அமைக்கப்பட்டுள்ளது. அது ஆரம்ப கால பல்லவ, சோழ காலத்தைப் பிரதி பலிக்கின்றது.
விமானத்தின் மூன்று தளங்களும் சதுர வடிவில் அமைக்கப் பட்டிருப்பதுடன், மேலே தூபி வைக்கும் பகுதி யானது வட்ட வடிவமாக அமைக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். ஏறத்தாழ 14 அடி நீளம் கொண்ட விமானமாக இது கருதப்படுகிறது.
மேலும் இலங்கைத் தொல்லியற் திணைக் களம் இவ் ஆலயத்தின் பழைமையைக் கருத்திற் கொண்டு இக்கோவிலை மீண்டும் புனரமைத்து ஒரு வரலாற்றுச் சின்னமாக மாற்றுவதற்கு உரிய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.
யுத்தம் காரணமாக இக் கோயில் விமானத்தின் முன் பக்கம் அழிவடைந்த நிலையிலேயே காணப்படுகின்றது. ஆலய விமானத்தில் வைத்துக் கட்டப்பட்ட கற்கள் வெடிப்படைந்த நிலையிலேயே காணப்படுவதுடன், அது எப்போது விழுமோ என்று எண்ணத் தோன்றுகிறது. கர்ப்பக்கிரகத்தில் இருந்து தீர்த்தம் வெளிப்படும் பகுதி கோமுகி எனப்படும். 1993 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் நல்ல நிலையில் இருந்த கோமுகி தற்போது அதன் கலை அம்சத்தை இழந்திருப் பதையும் காணக்கூடியதாக உள்ளது.

எனவே யாழ்ப்பாணத்தில் கண்டு பிடிக்கப்பட்ட ஆலயங்களில் மிகப் பழைமையாக ஆலயங் களுள் ஒன்றாக இம் மண்ணித் தலைச்சி சிவாலயம் இருக்கலாம் என்பதே என்னுடைய கருத்தாகும்.
இக்கோவில் பல்லவர் காலத்துக்குரிய கோவில் என தமிழக தஞ்சைப் பல்கலைக் கழக கலை வரலாற்றுப் பேராசிரியர் காளிதாஸ் அவர்களின் கருத்து என்பதுடன், இக்கூற்றைத் தமிழ் நாட்டு வரலாற்று ஆசிரியர்களும் உறுதிப்படுத்துகின்றனர். இதே வேளை தமிழக தொல்லியற் திணைக்கள ஆய்வாளர் டாக்டர் சிறிதரன் அவர்களின் கூற்றுப்படி இக்கோயில் 10ம் நூற்றாண்டுக்கு உரியது ஆகும்.
ஆனாலும் அக்கோவில் கட்டப்பட்ட ஆண்டைக் கண்டு பிடிப்பதற்கு உரிய எந்தவொரு கல்வெட்டும் எழுத்து ஆதாரமாக இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை.

ஆனாலும் யாழ்ப்பாணத்து அரசர்கள் காலத் தில் வழக்கில் இருந்த அல்லது அவர்கள் காலத்தில் வழிபடப்பட்ட கோயிலாக இச்சிவாலயத்தை கருதலாம்.
ஏனெனின் இலங்கையில் அதிகளவு தமிழ் தொன்மைச் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடமாக பூநகரி விளங்குகிறது.

படங்கள்: லலீசன்


Akchaya
Digital Photography
Akilan wedding planner
உங்கள் திருமண நாள், பிறந்த நாள் மற்றும் ஏனைய நிகழ்வுகளுக்கும் மண்டம் மணவறை அலங்காரம். நாதஸ்வரம். பூ மாலை. கேக், சிற்றுண்டி, குடிபானங்கள், உணவு வகைகள், மேக்கப், வாகன ஒழுங்குகள் மற்றும் ஐயர் பேன்ற அனைத்து தேவைகளையும் செய்துதரக் காத்திருக்கின்றோம்!
எமது வாடிக்கையாளர்களுககு ஓர் அரிய வாய்ப்பு
எம்மிடம் மணவறை, மேடை அலங்காரம், மேசை அலஙக்காரம் மற்றும் வீடியோ, புகைப்படம் பதிவு செய்து கொள்பவர்களுக்கு
1 Album இலவசமாகச் செய்து தரப்படும்...!
20.01.2017 - 20.03.2017
www.akchayadigitalphotography.eu
இச் சலுகை குறிப்பிட்ட காலம் மட்டுமே என்பதையும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்
akchaya photography
Grüner Weg-6 53474 Bad Neuenahr-AW, GERMANY
contact : E,Akilan
Professional Photography
e-mail:akchayadigitalphotography20@gmail.com
Tel. : 02641 91 68 98
Mobile : 0163 36 40474




அன்று முதல் இன்று வரை
தமிழர் இல்லம் எங்கும் ஒலிக்கிறது
வெற்றிமணி
Vettimaniy@hotmail.com
0163 199 2333




உலகின் முன்னணி விமான நிறுவனங்களை
Consulting Network
Travels·Business·Worldwide
ஒன்றிணைத்து
சலுகை விலையில் உத்தரவாதமான
சேவையினை வழங்குகின்றோம்




Rheinische str-72,44137 Dortmund Germany
Tel: 0231 10 87 63 60
Tel: 0231- 108 763 61, 0231 584 407 63 Fax: 0231 108 763 62 Mobile:0163- 871 43 69


சிவத்தமிழ் சிறக்க வாழ்த்துகிறோம்

யேர்மனியில் புகழ்பெற்ற

மொத்த விற்பனை நிலையம்

# StaR-Impex

அபிஷேகப் பொருட்களுக்கு இன்றே நாடுங்கள்






ஆலயத்திற்கும், இல்லத்தின் மங்கலகரமன வைபவங்களுக்குமான பூஜைப் பொருட்கள். மற்றும்திருவிழாக்களுக்கு வேண்டிய அபிஷேகப் பொருட்களுக்கும் என்றும் நாடுங்கள்.

Fax: 0231/8602698 E-Mail: star-impex@live.de

Kipperstr. Tor 3
44147 Dortmund

**Tel.: 0231/8602696 Mobil: 0172/2183703**

சிவத்தமிழ் சிறக்க வாழ்த்துகிறோம்

## உனக்குள்ளே இருப்பது தான் உனக்கு வெளியிலேயும் இருக்கிறது!

**– சுவாமி விவேகானந்தர்**




எப்போதும் கொடுப்பவனாக இருக்கப் பழகுங்கள். அன்பு, உதவி, நல்லெண்ணம், கருணை இவற்றைப் பிறருக்குக் கொடுத்து மகிழுங்கள். பதிலுக்கு பிறரிடமிருந்து எதையும் எதிர்பாராதீர்கள். இறைவன் எப்படி வாரி வழங்குகிறானோ அதுபோல நீங்களும் கொடுத்து வாழுங்கள்.

"எனது வீரக் குழந்தைகளே, நீங்கள் மகத்தான பணிகளைச் செய்யப்பிறந்தவர்கள் என்பதில் நம்பிக்கை கொள்ளுங்கள். சிறிய நாய்க்குட்டிகளின் குரைபைக் கேட்டு நீங்கள் அஞ்ச வேண்டியதில்லை. ஆகாயத்தின் இடியோசைகளைக் கேட்டும் நீங்கள் அஞ்ச வேண்டாம். எழுந்து நின்று வேலை செய்யுங்கள்."
"மிருகபலத்தால் அல்லாமல், ஆன்மிக பலத்தால் மட்டுமே எழுச்சி பெறப்போகிறது. அழிவு முறையின் மூலமாக அதன் எழுச்சி உண்டாகப் போவதில்லை. மாறாக, அமைதி, அன்பு, ஆகிய முறைகளின் மூலமாகத்தான் இந்தப் பணி நடைபெறும்."

"புராதன பாரத அன்னை மீண்டும் ஒரு முறை விழிப்படைந்துவிட்டாள். தனது அரியணையிலே அவள் அமர்ந்திருக்கிறாள். புத்திளமை பெற்று என்றுமே இல்லாத அரும் பெரும் மகிமைகளோடும் அவள் திகழ்கிறாள். இந்தக் காட்சியை பட்டப்பகல் வெளிச்சத்தைப் போலத் தெளிவாக நான் பார்க்கிறேன். அமைதியும் வாழ்த்தும் நிறைந்த குரலில் இந்தப் பாரத அன்னையை உலகம் முழுவதிலும் ப்ரகடனப்படுத்துங்கள்."

"சமய சாதனையின் நுட்ப இரகசியமெல்லாம் கொள்கைகளில் இல்லை. அதை அனுஷ்டிப்பதில் தான் அடங்கியிருக்கிறது. நல்லவனாகவே இருந்து நன்மை செய்வது தான் சமய சாதனையின் முழு உண்மையாகும். கடவுளே! கடவுளே! என்று அழைத்துக் கொண்டிருப்பவன் சமயச் சான்றோன் ஆகிவிடமாட்டான். ஆனால் இறைவனின் விருப்பத்தை நிறைவேற்றுகிறவனே சான்றோன் ஆவான்."

"ஆன்மிக வாழ்க்கைக்கோ மனதுக்கோ உடலுக்கோ மனதிற்கோ பலவீனத்தை உண்டுபண்ணும் எதையும் உன் கால்விரலாலும் தீண்டாதே. மனிதனிடம் இயற்கையாகப் புதைந்திருக்கும் ஆற்றலை வெளிப்படுத்துவதே சமய வாழ்க்கையாகும்."

"நீ உண்மையில் தூய்மையுள்ளவனாக இருந்தால் தூய்மை இல்லாததை நீ எப்படிப் பார்க்க முடியும்? ஏனென்றால், உனக்குள்ளே இருப்பது தான் உனக்கு வெளியிலேயும் இருக்கிறது. நமக்குள்ளேயே அசுத்தம் இல்லாவிட்டால், அதை நாம் வெளியில் பார்க்க முடியாது. இந்த உண்மை, வேதாந்தத்தின் அனுஷ்டானப் பகுதிகளில் ஒன்றாக விளங்குகிறது. வாழ்க்கையில் இந்தக் கருத்தை ஏற்று நடத்த நாம் அனைவரும் முயற்சி செய்வோம் என்று நான் நம்புகிறேன்."



# நீங்கள் புதிய மனை அமைக்கவோ, கடன் பெறவோ, எதுவானாலும் உடனடி உதவி எங்களிடம் உண்டு

## வீட்டுக்கடன்

# 1,2%

01.06.2016

வட்டிவீதத்திலிருந்து

உங்கள் சொந்த வீட்டை புதிய தரத்திற்கு மாற்ற விரும்பினால், **60.000€** வரை உடனடி கடன் உதவி!





## தற்போதைய வீட்டுக்கடனை அல்லது (தனிநபர்)கடனை (Privatkredit) குறைந்த வட்டிக்கு மாற்றுதல்

நீங்கள் வீடு கட்ட முடிவெடுத்து விட்டீர்களா ?

NRW மாநிலத்தில் உங்களுடைய விருப்பத்துக்கேற்றவாறும், நியாயமான விலையிலும் உங்கள் இல்லத்தை அமைத்துத் தருகின்றோம் !

தொடர்புகளுக்கு:

**gothab Finance**

Rheinische Str. 72, 44137 Dortmund

**0231/53375365**
**0231/10876361**
**0152/53961138**

Th. Gobinath

சிவத்தமிழ் சிறக்க வாழ்த்துகிறோம்